Registered as a News Paper

விலை: 12.00

# ஈழநாதம்

பக்கம் – 16

வெள்ளிநாதம் Weekly

நாதம்—14 வெள்ளி—11 09—15 மே 2003



# டோக்கியோ மாநாட்டுக்காய் வன்னி நோக்கிய வரவுகள்...



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி 09.05.2003

# வணக்கத்துக்குரிய அஸ்கிரிய பீடாதிபதிக்கு

'வடக்குக் கிழக்கில இருந்து இராணுவம் விலகக் கூடாது கடற்படையினர் மீதும் அவர்களின் செயற்பாடுகள் மீதும் தலையீடு எதுவும் மேற்கொள்ளப்படக்கூடாது. அவர்களை சுயாதீனமாகச் செயற்பட அனுமதிக்க வேண்டும்.' - இவ்வாறு அஸ்கிரிய பௌத்த மத பீடத்தின் மகாநாயக்கரான உடுகம சிறிபுத்தரகித்ததேரர் 'ஞானோபதேசம்' செய்துள்ளார்.

இவரது பெயரைக் கேட்டவுடனேயே இருவிடயங்கள் நினைவுக்கு வருவதைத் தடுக்க இயலாமல் உள்ளது.

ஒன்று 'உடுகம' என்ற பெயர் - ஒருகாலத்தில் சிறிமாவோ ஆட்சிக்காலத்தில் - யாழ் குடாவில் இராணுவ உயர் அதிகாரியாக இருந்து அட்டகாசம் புரிந்த கேணல் உடுகம என்பவர் தமிழ்மக்கள் மீது இராணுவ அழுத்தத்தை பிரயோகித்தவர்களில் முதன்மையான ஒருவர்.

மற்றது புத்தரகித்த தேரர் என்ற பெயர்: இவரும் ஒரு மோசமான பௌத்த மத வெறியர் மட்டுமல்ல. பண்டாரநாயக்கா கொலைவழக்கின் முக்கிய குற்றவாளிகளின் ஒருவர். ஆயுள் தண்டனை அனுபவிக்கையில் சிறைக்குள்ளேயே கொடியநோயால் இறந்தவர் எனக்கூறப்பட்டவர்.

இந்த இரு பெயர்களை இணைத்துக்கொண்டவரான அஸ்கிரிய பீடாதிபதியின் இந்த ஆலோசனை சிங்கள, பௌத்த இனவாத அரசியல்வாதிகளுக்கு உற்சாகமூட்டும் கருத்தாக மட்டுமல்ல, ஆட்சியாளர்களால் நிராகரிக்க முடியாத விடயமாகவும் இருக்கும்.

அரச நிர்வாகத்தில் பௌத்தமதபீடங்களின் ஆதிக்கம் எத்தகைய வலிமைமிக்கது என்பது எவராலும் இலகுவாக புரிந்து கொள்ளக்கூடிய ஒன்றேயாகும்.

அமைதியையும், தர்மத்தையும், நீதியையும், சமாதானத்தையும் போதிக்க வேண்டிய பௌத்த பீடங்கள், அரச வாழ்வின் அனர்த்தங்களை புறக்கணித்து அறவழியில் ஞானம் பெற்ற போதிமாதவனின் புனிதக்கொள்கைகளை, தத்துவங்களை புறக்கணித்துவிட்டு, மூன்றாந்தர இனவாத - மதவாத அரசியல்வாதிகளாகக் கருத்துக் கூறிவருவது தான் வேதனைக்கும் வியப்புக்கும் உரியதாகும்.

இன்றைய சிறிலங்காவின் இனப்பிரச்சினை இவ்வளவுக்கு விகாரமாகியிருப்பதற்கு மூலகாரணிகளுள் பௌத்த மதத்துறவிகளின், நீதியற்ற, அரசியல் ஆலோசனைகளும், பின்னணி ஆதரவும், அத்தகைய வகுப்புவாத, அரசியல் தலைமைகளுக்கு அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிவரும் ஆசீர்வாத அநுசரணைகளுமே முக்கியமானதாகும். இதனை இந்த நாட்டின் இனவாத அரசியல் வரலாற்று அத்தியாயங்கள் தெளிவாக உணர்த்தி நிற்கின்றன.

சிஹலஉறுமய, ஜே.வி.பி தேசப்பிரேமி ஜனதா வியாபாரய, பிக்குபெரமுன, சிங்கள பூமிபுத்திர கட்சி, மற்றும் ஏனைய பேரினவாதக் கட்சிகளின் ஆதரவாளர்களாக இருக்கும் பௌத்த பிக்குகளின் இனவாத - மதவாதத் தீவிரமானது சிறிலங்காவின் நிரந்தர அமைதியின்மையின் விஷவித்தாகியுள்ளது.

சமாதானத்தை அவமதிக்கும் ஆழ்மன இலக்குடன், சமாதானத்தை ஆதரிப்பதாக நுனிநாக்கால் மட்டும் சகோதரத்துவ தத்துவம் பேசிக்கொண்டும், இனவாத அரசியல் தலைமைகளுக்கு ஆசீர்வாதமும், ஆலோசனையும் வழங்குவதானது மஞ்சள் அங்கிக்கு மகிமைசேர்க்கும் விடயமாகாது.

வடக்குக் கிழக்கில் இராணுவ பிரசன்னத்தை வைத்துக் கொள்வதன் மூலம்,சிங்கள மக்களையும், பௌத்த மதத்தையும் பாதுகாப்பாக வைத்திருக்கவோ அல்லது வளர்க்கவோ முடியுமென அஸ்கிரிய பீடாதிபதி நம்புகிறாரா?

அல்லது இராணுவ - கடற்படையினரின் நடவடிக்கைகளில் தலையீடு செய்யக் கூடாது எனக் கூறுவதன் மூலம், இல்லை கட்டளை இடுவதன் மூலம் தமிழ்மக்கள் நிரந்தரமாகவேஆக்கிரமிக்கப்பட்ட, அடக்கப்பட்ட மக்களாக இருக்க வேண்டும்மென்று விரும்புகிறாரா?

இதேவேளை விடுதலைப்புலிகளை சமாதானப் பேச்சுக்கு மீண்டுவர அவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

அரசாங்கமும், பேரினவாதிகளும் சொல்வதெல்லாம் - செய்வதெல்லாம் சரி, ஆனால் விடுதலைப்புலிகள் தமது மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக புரிந்துணர்வு உடன்பாட்டின் அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்ட விடயங்களை அமுல்படுத்தக் கோருவதும் அதற்காக சமாதானப் பேச்சுக்களில் கலந்து கொள்ளாது தற்காலிகமாக நீதிகேட்டு விலகிநிற்பதும் பிழையென, 'தம்மபதத்தில்' எந்தப்பக்கத்தில் வலியுறுத்தப்பட்டிருக்கிறதாம்?

அழுத்தம்' என்பது சமாதானத்தின் அர்த்தமுள்ள பங்களிப்பை செய்ய உதவாது என்பதை அஸ்கிய பீடாதிபதி உணர்வது அவசியமாகும்.

அதேபோல் இராணுவ பிரசன்னத்தையும், கடற்படையின் நடவடிக்கையையும், நிரந்தரமாக வைத்திருக்குமாறு அவர் ஆலோசனை கூறுவதும், அமைதியின் மீதான அவரது அவநம்பிக்கையின் வெளிப்பாடாகவே உணரக்கூடியதாக உள்ளது.

ஆயுத முனையிலும், இராணுவ ஆக்கிரமிப்பிலும், அர்த்தமற்ற அழுத்தங்களிலும் நம்பிக்கைவைத்து அதன் மூலம் தமிழ் மக்களை அச்சுறுத்தி ஒரு போலி சமாதானத்தை நிலை நிறுத்த அஸ்கிரிய பீடாதிபதி நினைத்தால் அது கடந்த வரலாற்றை அவர் மறந்துவிட்டார் என்றே அர்த்தம் கொள்ளவைக்கும்.

எல்லாவற்றிலும் மேலாக, சிங்கள மக்களுக்கும் சிறிலங்காவுக்கும் நிரந்தரமான உறுதியான, அமைதியை கொண்டு வரக்கூடியதுதான். ஓர் சமாதான தீர்வுக்கான அவரது ஆதராவின்மையையும் இது வெளிப்படையாக பிரகடனம் செய்வதாகவும் இருக்கும்.

மதபீடங்கள் மனித நேயத்துடன் சிந்திக்காவிடில் அரசபீடங்கள் அவலங்களை ஏற்படுத்தும் பீடங்களாகவே இருக்கும்.

---

# அமைதி நிதி நோக்கி நகர்ந்ததா? தீர்வு நோக்கி நகர்ந்ததா?

மீண்டும் போருக்குத் திரும்பும் எண்ணம் எமது அரசிற்கு இல்லை என சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் உரையாற்றியிருக்கும் அதேவேளை கிளிநொச்சியில் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொள்ள வைக்கும் இராசதந்திர முயற்சிகளிற்காக இராசதந்திரிகளின் வருகை நடைபெறுகின்றது.

கடந்த புதனன்று ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி தமைமையிலான குழுவினர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்திருந்தனர்.

டோக்கியோ நிதி மாநாட்டிற்கு புலிகளை கலந்துகொள்ள வைப்பதற்கான ஒரு இராஜதந்திர வருகையாக அது இருந்தது.

புலிகள் இது விடயத்தில் தமது நிலைப்பாட்டை அகாஷிக்கு தெளிவுபடுத்தியிருந்தனர்.

தரப்பட்ட வாக்குறுதிகள், செய்து கொள்ளப்பட்ட உடன்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டு மக்களுக்கு இடப்பெயர்வு யுத்த வாழ்விலிருந்து புனர்வாழ்வளிப்பதும் இயல்பு வாழ்வைத் தோற்றுவிப்பதும் யுத்தத்தால் சிதைந்துபோன வடக்கு கிழக்கை புனர்நிர்மானம் செய்வதும் பேச்சின் நம்பிக்கைக்கும் அடுத்தகட்டநகர்விற்கும் அவசியமானது என வலியுறுத்தியிருந்தனர்.


இவை சீர்செய்யப்படுமிடத்து டோக்கியோ மாநாட்டை தாம் புறக்கணிப்பதற்கான தேவை எழாது என்பதை வலியுறுத்தினர். இதில் யுத்தத்தை வலிந்திழுப்பதற்கான நோக்கமின்றி உடன்பட்டதை அரசு நடைமுறைப்படுத்தி சமாதானப்பேச்சை பலப்படுத்தவேண்டும் என்பதை வலியுறுத்தும் நோக்கமே பொதிந்திருப்பதாக வெளிப்படுத்தினர்.

அரசு போருக்கு திரும்பாது என்ற விடயத்தில் எவ்வளவு உறுதியாக இருக்கிறதோ அதேயளவு பற்றுறுதி புலிகளுடனான பேச்சுக்களில் வழங்கப்பட்ட வாக்குறுதிகளையும் உடன்பாடுகளையும் செயற்படுத்துவதில் கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

போருக்குத் திரும்புதல் என்ற சொல்லைவிட போருக்கு செல்லத் தேவையில்லாத வகையிலான செயற்பாடுகளை அரசு பலப்படுத்துவதே சமாதானத்தை நிலை நிறுத்தும்.

அரசு என்ற வகையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கு வாக்குறுதிகளை நிறைவேற்றுவதிலும் சிக்கல்களை களை வதிலும் சிரமம் இருக்கலாம்.

அதேயளவு சிக்கல்களும் சிரமங்களும் உடன்பாடுகள் நடைமுறைப்படுத்தப் படாதவிடத்து தமிழ் மக்களைப் பிரதிநித்துவப் படுத்தும் புலிகளிற்கும் உண்டு என்பதை அரசு உணர்ந்து கொள்ள வேண்டும்.



சமாதான விரோத சக்திகளினதும் படைத்தரப்பின் சினமூட்டும் செயற்பாடுகள் மத்தியிலும் புலிகள் சமாதானச் சூழலில் தமது விருப்பினை நிலைநிறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் எவ்வளவோ செய்ய வேண்டியிருக்கின்றது என்ற இராசதந்திர வார்த்தை பிரயோகங்களுக்கூடாக தப்பித்துக் கொள்வதைவிட எவ்வளவு செய்ய வேண்டியிருக்கிறதோ அவ்வளவையும் செய்வதே பொருத்தமானதாக இருக்கும்.

இதில் அரசிற்கு மட்டுமல்ல இலங்கையில் சமாதானத்தை ஏற்ப்டுத்துவதற்காக பங்காற்றுகின்ற எல்லா சர்வதேசசக்திகளிற்கும் பொறுப்புண்டு.

மாறாக தமிழ்மக்களின் அதிருப்திகளையும் விசனங்களையும் புரிந்துகொள்ளாது தாம் நினைத்தவாறெல்லாம் சமாதான முயற்சிகள் நடைபெறவேண்டும் என நினைப்பதும் அதற்கு ஏற்றவாறு அழுத்தம் கொடுக்க முயல்வதும் உண்மையான சமாதானத்தை ஏற்படுத்த பிரயோசன்ப்படாது.

புலிகளின் நியாயமான கோபங்களும் அவர்கள் அடையும் சந்தேகங்களும் எந்த பின்னணியிலிருந்து ஏற்படுகின்றது என்பதையும் புரிந்துகொள்ளவேண்டும்.

இதுவே சமாதான தடைக்கற்களை நீக்கவும் சமாதானப் பாதையை செப்பனிடவும் உதவும்.

உடன்பட்டதை நடைமுறைப்படுத்தாது தட்டிக் கழிப்பதென்பது பேச்சு மேசையில் புலிகளின் குரலை பலவீனப்படுத்துவதாகவே இருக்கும். பேச்சு மேசையில் புலிகளைப் பலவீனப்படுத்துவதென்பது தமிழ்மக்களின் அரசியல் பலத்தை சிதைப்பதை நோக்கமாகக் கொண்டதா என்ற பலமான சந்தேகத்தை எழுப்பவே செய்யும்.

இச்சூழலில் தமிழ்மக்களிடம் நம்பிக்கை ஏற்படத்தக்கவாறான செயற்பாடுகளே சமாதானத்திற்கு அவசியமானது.

ஆனால் நடப்புக்கள் வேறானதாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக டோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளிற்கான கூட்டத்திற்கு புலிகள் பங்கு பற்றாதுவிட்டால் அது இலங்கைக்கு உதவி வழங்கும் கூட்டமாக மாற்றப்படும் என்பதும் புலிகள் கலந்துகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதும் யுத்தம் தந்த வாழ்விலிருந்து மீள வழிதேடி நிற்கும் மக்களுக்கு அவற்றைப் புறக்கணித்து இதை வற்புறுத்துவது எதிர்மாறான விளைவுகளையே தோற்றுவிக்கும்.

சமாதான முயற்சிகளை குழப்புவதற்கென்றே பல தீய சக்திகள் சதுரங்கக் காய்களை நகர்த்தி வருகின்றன.

இந்நிலையில் இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பாடுபடும் சர்வதேச அரசுகளுக்கு தமது கருத்துக்களையும் அறிக்கைகளையும் நிதானமாக வெளியிடவேண்டிய பொறுப்பு அதிகம் வேண்டும்.

ஏனெனில் சமாதானத்திற்கு எதிரான சக்திகளுக்கு எந்த வகையிலும் வாய்ப்பளிப்பதாக, ஊக்கமளிப்பதாக அவை இருக்கக் கூடாது.

டோக்கியோ மாநாடு பற்றிய விவகாரம் புலிகள் தரப்பு நிலைப்பாடுகளை ரணில் விக்கிரம சிங்கவுக்குத் தெளிவுபடுத்தி இவ்வாரம் மீண்டும் வரவுள்ள அகாஷி கொண்டுவரவிருக்கும் பதில் செய்தியில்தான் அதன் முடிவுதங்கியிருக்கிறது.

தமிழ்மக்கள் நம்பிக்கை கொள்ளும் செய்திக்காக ரணில் அழுத்தம் பெறவேண்டியது அவசியமாக இருக்கக்கூடும்.

---

நம்மை நாமே மதிப்பிடும் போது, உண்மைகள் பற்றி அக்கறை அதிகம் காட்டுவதில்லை. – மார்க் ட்வெய்ன்

# ரணில் அனுப்பிய தூதுவர்கள்

**நிலாந்தன்**

**ஐரோப்பாவிலிருந்து** வந்த ஒரு தமிழர் யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டுச் சொன்னார்..... "உயர்பாதுகாப்பு வலயம் எனப்படுவதெல்லாம் தமிழர்களுக்குத்தான். ஆனால் சிங்களவர்களுக்கோ அவை உல்லாசப்பயணத்தலங்கள்..... சில உயர்பாதுகாப்பு வலயங்களில் சிங்களவர்கள் உல்லாசமாகத் திரிவதைக் காணமுடிகிறது. அவர்கள் அங்குள்ள படையாட்களின் உறவினர்களாக அல்லது நண்பர்களாக இருக்கலாம்....." என்று.

என்பதனால்தான் போலும் யாழ்நகரில் உள்ள உயர்பாதுகாப்பு வலயத்தை சிறிது நகர்த்தும் முயற்சிக்கு தென்னிலங்கையில் பரவலாக எதிர்ப்புத்தோன்றியுள்ளது.

சிறிது நகைச்சுவையாகக் கூறின் - இப்போதிருப்பதை விடவும் இனி அவர்கள் அமைக்க உத்தேசித்திருக்கும் உயர்பாதுகாப்பு வலயம் சிங்கள உல்லாசப்பயணிகளைப் பொறுத்தவரை ஒப்பீட்டளவில் கவர்ச்சியானது. பண்ணைத்துறையும் பரவைக்கடலும் பாழடைந்த கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டு போகும் தனித்ததெருவுமாக அதுமிக அழகான ஓரிடம்.....

இந்த இடத்துக்கு யாழ்நகரில் உள்ள உயர்பாதுகாப்பு வலயத்தை மாற்றுவது என்ற முடிவு அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு பிரதமரின் செயலர் பிரட்மன் வீரக்கோன் வந்ததையொட்டி அறிவிக்கப்பட்டது.

பிரட்மன் வீரக்கோனை ரணில் விக்கிரமசிங்க தனிப்பட்ட முறையில் அனுப்பியதாக நம்பப்படுகிறது.

புலிகள் பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக ஓதுங்குவது என்று முடிவெடுத்த பின்பு ரணில் விக்கிரமசிங்க இரண்டு தூதுவர்களை அனுப்பியிருந்தார்.

ஒருவர் அரசியல்வாதி, அமைச்சர் சந்திரசேகரன். அவர் கிளிநொச்சிக்கு வந்து புலிகளின் பிரதானிகளைக் கண்டு கதைத்தார்.

மற்றவர் நிர்வாகி, பிரட்மன் வீரக்கோன். இவர் யாழ்ப்பாணத்துக்கு வந்து அரச உயர் அதிகாரிகளையும் படைத்துறை உயர் அதிகாரிகளையும் கண்டு கதைத்தார்.

இருவருமே ரணிலின் செய்திகளோடு வந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. அண்மைக் காலங்களில் சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள தடைகளை அகற்றுவதற்காக அனுப்பப்பட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது.

கடந்த இரு கிழமைகளாக கிளிநொச்சியை நோக்கிப்பறந்து வந்த அநேகமான எல்லா ஹெலிகொப்டர்களுமே இப்படி யாராவது தூதுவர்களை ஏற்றி இறக்கியவைதான்.

ஒரு சாதாரண தமிழ்க் குடிமகனைப் பொறுத்தவரை இதெல்லாம் அரசாங்கம் புலிகளுடன் ஏதோ ஒரு இணக்கத்துக்கு வர எத்தனிப்பது போல தோன்றக் கூடும்.

நிலவும் இறுக்கத்தை இவை தளர்த்திவிடும் என்றுமவர் நம்பக்கூடும்.

இது பாதியளவு உண்மையும்தான்.

ஆனால் ஈழப்போரின் கடந்த கால சமாதான முயற்சிகள் பற்றிய தொடர்ச்சியான அனுபவங்களினடியாக சிந்திக்கும் எந்தவொரு கூர்மையான அவதானியும் அரசாங்கத்தின் "விட்டுக் கொடுப்புகளை" வேறுவிதமாகவே வியாக்கியானம் செய்யப் புகுவர்.

அதாவது அரசாங்கம் முதலில் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்த விவகாரங்களையே பின்னர் அமுல்ப்படுத்தாது பின்னடிக்கும் போது தமிழர்கள் அற்பமான விசயங்களுக்கெல்லாம் போராட வேண்டியிருக்கிறது. அல்லது பகிஷ்கரிக்க வேண்டியிருக்கிறது.





முழுச்சமாதான முயற்சிகளையுமே நெருக்கடிக்குள்ளாக்கி விடுவது போல தோன்றும் இத்தகைய பகிஷ்கரிப்புக்களின் முடிவில் அரசாங்கம் இறங்கிவருவது போல ஒரு மாயத்தோற்றம் உண்டாகும்.

இது எதையோ புதிதாகப் பெற்றுவிட்டது போன்ற ஒரு திருப்தியை சாதாரண தமிழ்க்குடிமகனுக்குக்கொடுக்கும்.

ஆனால் உண்மைநிலை என்னவென்றால் - அரசாங்கம் முன்பு ஒப்புக்கொண்ட விஷயங்களில் இருந்து பின்னர் பின்வாங்கியது. அல்லது வாக்குறுதிகளை முறித்தது. அல்லது அவற்றை அமுல்ப்படுத்துவதை இழுத்தடித்தது என்பதே.

முன்பு நிகழ்ந்த எல்லாச் சமாதான முயற்சிகளின் போதும் இது நிகழ்ந்திருக்கிறது.

குறிப்பாக இந்திய - இலங்கை உடன்படிக்கையின் போது அப்பொழுது புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பிலிருந்த திலீபன் உண்ணாநோன்பிருந்தது ஒப்பந்தத்துக்கு வெளியே எந்தவொரு புதிய கோரிக்கையையும் முன்வைத்து அல்ல.

மாறாக ஒப்பந்தத்தில் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட , வாக்குறுதி அளிக்கப்பட்ட விவகாரங்களை அமுல்படுத்தக் கோரியே திலீபன் உண்ணாநோன்பிருந்தார்.

அவர் உயிர்விடும் வரையும் ஜெயவர்த்தனவோ அல்லது டிக்சிற்ரோ இறங்கிவரவில்லை.

அவர் உயிர்விட்ட பிறகே அவர்கள் ஒரு இணக்கத்துக்கு வர தயாராக இருந்தார்கள்.

அன்னைபூபதியின் உண்ணாநோன்பும் இத்தகையதே. அதில் அவர்கள் இறங்கிவரவேயில்லை.

அதாவது - இருதரப்பும் ஒப்புக்கொண்டு ஒப்பந்தம் செய்த விவகாரங்களை அமுல்ப்படுத்துவதற்கென்றே தமிழர்கள் பலதடவைகள் தியாகம் செய்ய நேர்ந்திருக்கிறது. அல்லது பகிஷ்கரிப்புச் செய்யவேண்டி வந்திருக்கிறது.


இம்முறையும் அப்படித்தான்.

சந்திரசேகரனும் பிரட்மனும் வந்து நிலமையின் தீவிரத்தை குறைத்தது போல ஒரு தோற்றம் உண்டாகியுள்ளது.

நோர்வேயின் தூதுவர்களும் அஹாசியும் வந்து நிலைமைகளை சரிசெய்வது போல ஒரு தோற்றம் உண்டாகியுள்ளது.

குறிப்பாக பிரட்மன் வீரக்கோன் யாழ்ப்பாணத்தில் அரச உயர் அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் சந்தித்தபின் கூறியவை இங்கே முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

"புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் மக்களின் அன்றாடப்பணிகளில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை என்று பொது சனங்களும் மக்களின் பிரதிநிதிகளும் என்னிடம் தெரிவித்தனர்.....அது உண்மை என்பதை நேரடியாக அறிந்தேன் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தெரிவிக்கும் விடயங்கள் சரியானவை உண்மையானவை என்பதையும் நேரில் அறிந்தேன்....." என்று பிரட்மன் கூறியுள்ளார்.



பிரட்மன் ஒரு பழுத்த நிர்வாகி. எட்டுப் பிரதமர்களுடன் வேலை செய்யதவர். இலங்கைத்தீவில் தற்சமயம் சேவையில் உள்ள மிகமூத்த முதன்மை நிர்வாகி அவர்.

பேச்சுக்களிலிருந்து தற்காலிகமாக விலகுவது என்று புலிகளிடமிருந்து வந்த கடிதத்தை அவர்தான் ரணிலிடம் கொண்டு போய்க் கொடுத்தவராம். கொடுக்கும் போது "வடக்கிலிருந்து ஏதோ சுவாரஷ்யமானது வந்திருக்கிறது....." என்று கூறினாராம். புலிகளின் ஆட்சேபனைகள் அவருக்கு சுவாரஷ்யமானவைகளாகத் தோன்றின போலும்?

புரிந்துணர்வு உடன்படிக்கை தமிழர்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவில்லை என்பதை அவரைப்போன்ற ஒரு மூத்தநிர்வாகி யாழ்ப்பாணத்துக்கு வந்துதானா கண்டுபிடிக்க வேண்டும்? அதுவும் 15 மாதங்களுக்குப் பிறகு?

இதற்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு வந்து போனபோதெல்லாம் இதை அவர் கண்டுபிடிக்காமல் விட்டது எப்படி?

உண்மை இதுதான் - இதெல்லாம் முன்கூட்டியே நன்கு தீர்மானிக்கப்பட்ட ஒரு நாடகத்தின் ஒரு பகுதியே. நிலைமையின் இறுக்கத்தைத் தளர்த்துவதே அவருடைய வருகையின் நோக்கமும் அவர் யாழ்ப்பாணத்தில் வைத்துக் கூறிய ஒப்புதல் வாக்குமூலத்தின் நோக்கமும்.

ஈழப்போரின் கடந்த இருதசாப்த காலத்திலும் நிகழ்ந்த சமாதான முயற்சிகளைப்பொறுத்தவரை தமிழர்கள் இப்படி எத்தனையோ ஒப்புதல் வாக்குமூலங்களை சமாளிப்புகளை கேட்டுக் களைத்து விட்டார்கள்.

இந்த அனுபவங்களின் பின்னணியில்வைத்தே ரணில் புலிகளுக்கு கடைசியாக எழுதிய கடிதத்தையும் வாசிக்கவேண்டியுள்ளது.

கடந்த15 மாத கால சமாதான முயற்சிகளில் முதலில் இடைக்கால நிர்வாகசபை என்று கூறப்பட்டது. பிறகு அரசியலமைப்புப்பிரச்சினைகளைக்காரணம் காட்டி அதைக்கூட்டுச்செயலணிகளாக மாற்றினார்கள். பிறகு அதையும் கைவிட்டு உபகுழு என்றார்கள். அந்த உபகுழுவில் ஒன்று ஏற்கனவே இறந்துவிட்டது. இன்னொன்று இழுபடுகிறது.

தியங்கிக்கொண்டிருந்த சமாதான முயற்சிகள் வொஷிங்ரன் மாநாட்டில் வந்துமுட்டி இறுகி நின்று விட்டன.

சமாதான ஷோக்கேசில் புலிகளை பொம்மைகள் போல வைத்து எடுக்கமுடியாது என்பதை அரசாங்கம் வொஷிங்ரனுக்குப் போக முதல் யோசித்திருக்க வேண்டும்.

அமெரிக்கா புலிகளை அழைக்காது என்று நம்புவதற்கு பலமான காரணங்கள் இருந்தன.

கடந்த 15 மாதகால சமாதான முயற்சிகளின் விளைவாக இதுவரையிலும் எந்தவொருநாடும் புலிகளின் மீதான தடையை நீக்கவில்லை என்பதை இங்கே குறிப்பிட வேண்டும்.

அவர்கள் எதற்காகவோ காத்திருக்கிறார்கள். அல்லது புலிகளின் மீதான தடையை அகற்றாமல் வைத்திருப்பதன் மூலம் புலிகளின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கலாம் என்று நம்புகிறார்கள்.

எனவே இதுவிசயத்தில் புலிகளின் சம அந்தஸ்தைப் பாதுகாக்கும் பொறுப்பு முதலாவதாக நோர்வீஜிய அனுசரணையாளருக்கும் இரண்டாவதாக அரசாங்கத்துக்கும் இருக்கிறது.

குறிப்பாக, அரசாங்கம் ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்ட விவகாரங்களையே நிறைவேற்றாமல் இழுத்தடித்துக் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில் இதுவிசயத்திலாவது சற்றுக் கூடுதல் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருந்திருக்கலாம்.

ரணில் சமாதானத்துக்கான தனது விசுவாசத்தை நிரூபித்திருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் அது.

ஆனால் அப்படியேதும் நடக்கவில்லை. அது என்னமோ அமெரிக்காவுக்கும் புலிகளுக்கும் இடையிலான ஒரு விவகாரம் என்பது போல பேசாமல் இருந்து விட்டார்கள்.

யதார்த்தத்தில் ரணில் தலைநகரில் பலவீனமாகக் காணப்படும் ஒரு பிரதமர். ஆனால் சர்வதேச அரங்கில் அதிகம் அங்கிகரிக்கப்பட்டவராக, மிகப்பலசாலியாகக்காணப்படுகிறார்.

எனவே வொஷிங்ரன் மாநாட்டைப் பொறுத்தவரை அவர் தனது செல்வாக்கை புலிகளுக்குச் சாதகமாகப் பிரயோகித்திருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

குறைந்தபட்சம் அவர் தனது தனிப்பட்ட எழுச்சியை பாதுகாப்பதற்காகவாவது புலிகளோடு அனுசரித்துப் போகவேண்டியிருக்கிறது.

அவருடைய எழுச்சி எனப்படுவது முழுக்கமுழுக்க அவருடைய சமாதானக் கணக்கில்தான் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவில் இப்பொழுது சமாதானத்தைத்தவிர கவர்ச்சியானது வேறெதுவும் இல்லை.

முன்பு, வெற்றிகளை அள்ளிக்குவித்துவந்த கிரிக்கெற் அணியும் இப்பொழுது கவர்ச்சி குறைந்த தொன்றாகிவிட்டது.

இந்நிலையில், கடந்த 15 மாதகாலமாக ரணிலின் கவர்ச்சி அதிகரித்துவருகிறது என்பதே யதார்த்தம்.

ஒரு சிங்கள கிறிக்கெற் விசிறி சொன்னார் ரணிலின் வருகை சமாதானத்துக்கு நல்லதுதான் ஆனால் கிறிக்கெற்றுக்குப் பொருத்தமாயில்லை என்று.

ரணிலின் கவர்ச்சியும் எழுச்சியும் சமாதான முயற்சிகளிலிருந்துதான் ஆரம்பிக்கின்றன.

இந்நிலையில் - இலங்கைத்தீவின் இது வரையிலுமான எல்லாச்சமாதான முயற்சிகளிலும் தொடர்ச்சியாகக் காணப்பட்டுவரும் ஒரு நோய்க் கூறான அம்சம் - அதாவது சிங்களவர்கள், கொடுத்த வாக்குறுதிகளை பிறகு முறிப்பதும் தமிழர்கள் பகிஷ்கரிப்பதுமாகிய ஒரு நிலை - ரணிலின் காலத்திலும் தொடர்ந்து வருவது என்பது ஒரு கெட்ட சகுணமே

இது, இம்முறையும் சமாதானம் முன்னைய தடவைகளைப்போல இடையில் முறிந்து விடுமோ என்ற அச்சங்களைப் பேணுவதாய் உள்ளது.

ஒரு மூத்த தமிழ்ப் பத்திரிகையாளர் அடிக்கடி பகிடியாகச் சொல்வார்..... "சந்திரிகா செய்தது சமாதானத்துக்கான யுத்தம் இப்பொழுது நடப்பது யுத்தத்துக்கான சமாதானம்...." என்று.

இப்பொழுதும் கூட காலம் கடந்து போய்விடவில்லை.

சமாதானத்துக்காகவே சமாதானம் என்று நிரூபிப்பதற்கு இன்னமும் வாய்ப்புக்கள் உண்டு.

இலங்கைத்தீவின் சமாதானம் நோர்வேகண்ட ஒரு கனவாக மாறாதிருப்பதென்பது அரசாங்கமும் சர்வதேச சமூகமும் இனி எடுக்கப் போகும் அடுத்தகட்ட நடவடிக்கைகளில்த்தான் தங்கியிருக்கிறது.

( இப்பத்தி 05.05.2003 இல் எழுதப்பட்டது) ■

# நறுக்கென...

## உயர்பாதுகாப்பு வலயமும் உயிர்பாதுகாப்பு வலயமும்



யாழ் நகரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினை இனப்பிரச்சினை தீர்ந்தாலும் கூட, தீராது போலிருக்கிறது.

மக்களின் வாழ்வியல் உரிமை - இராணுவத்தின் ஆக்கிரமிப்பு வலிமை இவையிரண்டையும் எப்படிக்கையாழ்வது என்பது அரசுக்கு தர்மசங்கடமான நிலைமையாகியுள்ளது.

மக்களுக்காக அரசு - மக்களின் அரசு - என்ற சனநாயகக் கோட்பாடு மதிக்கப்படுவதானால் இராணுவ நலன் குறித்து அக்கறைகாட்டி, அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதனை ஒரு பிரச்சினையாக்கி நம்பியாரையும், ரிச்சாட் ஆர்மிரேஜ்ஜையும், பிரிட்டிஷ் இராணுவ அதிகாரிகளையும் கூட்டிக் கொண்டுவந்து காட்டி அவர்களின் ஆலோசனைக்காக யாசிக்க வேண்டிய அவசியமே கிடையாது.

அவர்கள் அவர்கள் சார்ந்த நாட்டுக்கும் அதன் அபிலாஷைகளுக்கும் சாதகமான முறையில் இந்த நாட்டின் பிரச்சினைக்கு தீர்வுகாண விரும்புவார்களே யன்றி எங்கள் மண்ணின் - மக்களின் - நலனில் அக்கறை கொண்டு நியாயபூர்வமான கருத்தை தீர்வாக முன்வைப்பார்கள் என நம்புவது அபத்தமானது.

மாநகரசபை வளாகப்பகுதியில் முகாமமைக்கக்கூடாது என்று எதிர்ப்புக்கிளம்பியதும், ஏதோமக்களின் அபிலாஷைகளை மதிப்பதாக காட்டிக்கொண்ட அரசும், இராணுவமும் முகாமமைக்க வேறுஇடங்களை 'தேடுவது' போன்று 'பேய்க்காட்டி' விட்டு 'சுத்திச்சுத்தி சுப்பற்றை கொல்லையில்' என்று கூறுவதை போன்று அதேபகுதியில் பழைய பொலிஸ் நிலையத்திற்கு பக்கத்தில் அமைக்க முடிவெடுத்துள்ளார்கள்...

இது ஒரு 'பச்சை' இராணுவத்தனமாகும். மக்கள் தம்மத்தியில், இராணுவப் பிரசன்னம் என்பதும், தங்கள் மீதான அவர்களின் சந்தேகப்பார்வையும், தம் இயல்புவாழ்வின் சுதந்திரத்தைப் பாதிக்கும் என்று கருதுகிறார்கள் அவ்வளவு தான். இதனை அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவ ஆக்கிரமிப்பில் மக்கள் சமாதானத்தை நிம்மதியாக அனுபவிப்பார்கள் என எவரும் நம்பினால், அல்லது கூறினால், அவன் ஒரு அவிவேகபூரண குருவாகத்தான் இருக்க முடியும்.

இராணுவம் மக்கள் வதிவிடங்களுக்கு மத்தியில் அவர்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக முகாம்களை, தளங்களை அமைக்கும் அத்துமீறல்களால் இத்தனை லட்சம் மக்கள் தமது உடமைகள், வாழ்விடங்கள் அனைத்தையும் விட்டு இடம் பெயர்ந்தவர்களானார்கள் என்பதை சம்மந்தபட்ட 'ஆலோசகர்'கள் தமது கருத்துவழங்கும் அறிவுக்குள் செலுத்திக்கொள்வது நலம்.

இராணுவத்திற்கான உயர்பாதுகாப்பு வலயத்தை அவர்கள் தம்மை தமது எதிரிகளிடமிருந்து பாதுகாத்துக் கொள்ள எந்த ஒரு பொட்டல் வெளியிலும் அமைத்துக் கொள்ளட்டும் அது மக்களின் பாரம்பரிய உரிமைபூர்வமான வாழ்விடயங்களிலோ அதற்கு மத்தியிலோ அல்லது மிகஅண்மையிலோ இருப்பதை அவர்கள் விரும்பவில்லை.

இராணுவப் பிரசன்னம் - ஆக்கிரமிப்பு அற்ற இடமே மக்களுக்கான உயர்பாதுகாப்பு வலயமாக மட்டு மல்ல உயிர் பாதுகாப்பு வலயமாகவும் இருக்க முடியும்.

## ஜே.வி.பியின் பேய்க்காட்டல் சோஷலிசம்...



ஜே.வி.பியினருக்கு 'சமாதானம்' என்பது நிரந்தரமாகவே ஒவ்வாமைக்குரிய ஒரு சொல்லாகிவிட்டது.

ஆனாலும் போரும் இருக்கக்கூடாது:

அப்படியானால் போர்நிறுத்தம் தொடரவேண்டும். அதுமட்டுமல்ல விடுதலைப்புலிகள் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபடவேண்டும்.

ஆனால் சமாதானத்தீர்வு எதுவும் ஏற்படவும் அனுமதிக்கமாட்டார்கள்.

அவர்கள் சமாதானத்தை எதிர்க்க, அதைவைத்தே அரசியல் நடத்த சமாதானப் பேச்சுக்களை எவரும் நிறுத்திவிடுவதையும் கண்டிப்பார்கள்.

சமாதானம் தொடர்ந்தால் தானே சமாதானத்தை எதிர்த்து அரசாங்கத்தையும் விடுதலைப்புலிகளையும் திட்டித்திட்டியும், 'போரை' நியாயப்படுத்தியும் அரசியல் வியாபாரத்தை கச்சிதமாக நடத்தமுடியும்.

அவர்கள் விரும்புவதெல்லாம் யுத்தம் பற்றி மட்டுமேபேசிக்கொண்டிருக்கும் ஒரு சமாதானத்தைத்தான் பொ.ஐ.முன்னணியுடன் இணைசேரப் பேச்சுவார்த்தை நடத்தும்போதும் சனாதிபதியின் அதிகாரவலுவைப்பயன்படுத்தி, நாட்டைச்சமாதானம்என்றபோர்வையில்பிரிவினைக்கு இட்டுச் செல்கின்றார்பிரதமர், விடுதலைப் புலிகளுக்கு அவர்கள் கேட்பதை எல்லாம் கொடுக்கிறார் அவர், எனக் குற்றம் சாட்டி, தேசியபாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்பதைக்காரணம் காட்டி ஆட்சியைக் கலைத்து அதிகாரத்தைக் கைப்பற்றுமாறு கூறுகிறார்களேயன்றி, சமாதான நகர்வைப் பகிரங்கமாக தாங்கள் எதிர்ப்பதை வெளிப்படுத்தும் அதே வேளை , சனாதிபதி ஆட்சி மாறினாலும் புலிகளுடனான பேச்சுவார்த்தை தொடரும் என்று ஆதரிப்பதாகக் கூறவில்லை.

இது அவர்களுக்கேயான சோஷலிசக் கோட்பாட்டின் இயல்பினையே காட்டுகிறது!

ஒரு காலத்தில் இனங்களுக்குரிய சுயநிர்ணய உரிமைக்கோட்பாட்டை வலியுறுத்திய புரட்சி (?) காரர்கள் இன்று சுயநல அரசியல் உரிமைபற்றி மட்டுமே பேசும் புரட்டு (!) க் காரர்களாக மாறியுள்ளார்கள்.

தொழிலாளர்கள் தினமான மேதினத்திலும் கூட அவர்களின் கோஷம் உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என ஓங்கி ஒலிக்காது, விடுதலைப்புலிகளுக்கும், சமாதான நடவடிக்கைகளுக்கும் எதிரான சக்திகளே ஒன்று படுங்கள் என்ற தொனியைக் கொண்டதாகவே இருந்தது.

சிறிலங்காவில் பாட்டாளிவர்க்கப்புரட்சிபற்றியும் சமதர்மம், பொதுவுடமை தத்துவங்கள் பற்றியும் பேசிய இடதுசாரிகள் அனைவரும் வாய்ச்சொல்லில் வீரர்களாக' இருந்து விட்டமை தான் பரிதாபகரமானது. 90 சதவீதமான இடதுசாரித் தலைமைகள் 'முதலாளித்துவ' கனவில் மிதந்து கொண்டே சமதர்மம் பேசிப் பிழைத்துக் கொண்டார்கள்.

ஜே.வி.பியினர் 'பாராளுமன்றப்பாதைபணக்காரப்பாதை என்று' கூறிக்கொண்டே பாராளுமன்றக் கதிரைகளை இலக்குவைத்து நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

வர்க்க விடுதலைக்காக தம்மை - இந்த இனவாத சுயநல அரசியல் தலைமைகளை நம்பி ஆகுதியாக்கிய தென்பகுதி அப்பாவி இளைஞர்கள், யுவதிகள் தான் பரிதாபத்திற்குரியவர்கள்.

## அரசியல் பின்னணியில் பிக்குமார் முன்னணி...!



கடற்புலிகளை ஒரு கடற்படைப்பிரிவாக அங்கீகரிக்க வேண்டுமென்ற போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஆலோசனைகள், தமிழீழத்தை சிறிலங்கா அரசே அங்கீகரிப்பதற்கான முன்னேற் பாட்டு நடவடிக்கை யேயாகும். நோர்வே அரசு விடுதலைப்புலிகளுக்குச் சார்பாக செயற்படுகின்றதென்பதை நிரூபிக்க இது ஒன்றே போதுமானதாகும். எனவே இந்த நடவடிக்கையைத் தடுத்து நிறுத்த சனாதிபதி நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூற ஆரம்பித்துள்ளனர் தேசிய பிக்குகள் முன்னணியினர்.

இந்த ஆன்மீக, ஞானிகள் அரசியல் துறவறம் பூண்டு, பரி நிர்வாண நிலையை அரச மரநிழலில் எய்திய புத்தபகவான் வழி வந்தவர்கள். அமைதி, சாந்தி,தர்மம் பற்றி உபதேசிப்பவர்கள் என தம்மை மஞ்சள் அங்கி போர்த்தி, இனங்காட்டிக் கொள்பவர்கள்...

இப்போது அரசியல் ஞானிகளாகி சிறிலங்காவின் அரசபீடத்தையே ஆட்டுவிக்கும் சக்திகளாகியுள்ளனர்.

சிங்கள பேரினவாதத்திற்கு பௌத்தமதவாத முலாம் பூசிய 'மகான்'கள் இவர்களேதான்

இந்தப் பிக்குமார் முன்னணியினர் சிறிலங்காவின் அரசியலின் பின்னணிசக்திகளாக வரமுனைப்புடன் செயல்பட்டு வருவதாகக் கேள்வி.

அமைதியான ஆன்மீக அடையாளத்தை விடவும் ஆர்ப்பாட்டமான அரசியல் அடையாளத்தையே இவர்கள் விரும்புகிறார்கள் என்பது தெளிவு.

இன்றைய அவர்களது கவலைகள் எல்லாம் விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அளவில் எந்த வகையிலும் அங்கீகாரம் கிடைத்துவிடக்கூடாது என்பதே யாகும்.


கடற்புலிகளை தனிக்கடற்படைப்பிரிவாக அங்கீகரித்தால் தமிழீழத் தனியரசை அங்கீகரித்ததாகிவிடும் என இவர்கள் புலம்பத்தொடங்கியுள்ளமைக்கு காரணம் எதுவாக இருந்தாலும் இந்த நாட்டில் அமைதியான நிலை ஏற்படவும், தமிழ்மக்களுக்கு நியாயமான, உறுதியான ஒரு அரசியல் தீர்வு கிடைக்கவும் இவர்கள் உதவமாட்டார்கள் என்பது தெளிவு.

இப்போதைய கேள்வி என்ன வென்றால் அரசியல் வாதிகளால் பிக்குமார்கள், தமது அபிலாசைகளுக்கேற்ப பயன்படுத்தப்படுகிறார்களா? அல்லது அரசியல் வாதிகளை பிக்குமார் பகடைக்காயாக்கி வருகிறார்களா என்பதேயாகும்.

எதுவானாலும் புத்தம், யுத்தம் பற்றிபேசுவது புத்தத்திற்கும் நல்லதல்ல யுத்தத்திற்கும் நல்லதல்ல....

செங்குட்டுவன்

## மதவடி மயிலர்



**செய்தி : -விடுதலைப்புலிகளின் அறிவித்தலைப் பயன்படுத்தி பொ.ஐ முன்னணியும் ஜே.வி.பியும் அரசியல் லாபம் தேடமுயற்சி.**

மயிலர்: - எரியிற வீட்டிலை பிடுங்கினது லாபம் எண்டு நினைக்கிற ஆசாமிகள் அப்பிடித்தான் எல்லாத்திலும் ஆதாயம் தேடி ஆலாய்ப்பறப்பினம் பாருங்கோ... பெயருகளை மாத்திரம் பொது சன ஐக்கிய முன்னணியெண்டும், மக்கள் விடுதலை முன்னணியெண்டும் விலாசமா வைச்சிட்டினம், பின்னணியைப்பார்த்தா அசிங்கம்... ஐக்கியத்தையும், விடுதலையையும் பற்றி பேச இவங்களுக்கு என்ன அருகதையிருக்கோ தெரியேல்லை...

**செய்தி :- வரதராஜப் பெருமாள் இடமாற்றம் செய்யப்பட்டார் மற்றொரு இரகசிய இடத்திற்கு இந்திய அரசால் மாற்றம்.**

மயிலர்:- பெருமாள் பாடு பெரும்பாடு தான்பாருங்கோ....தலையாட்டியா இருக்க வெளிக்கிட்டா இப்படித்தானா இருக்கவேணும்.... தலைமறைவா இருந்தாலும்... ஆராரோ சொல்லுறதுக் கெல்லாம் அவர் தலையாட்டிக் கொண்டே தான் இருக்கவேண்டும்.... பெருமாளை இந்தியா ஆட்டிப்படைக்குது.... பெருமாளின் அணியோ இங்கே காட்டிகுடுக்குது...

**செய்தி:- கூடிய நேரத்தை தொலைக்காட்சியுடன் செலவிடும் இலங்கைச் சிறார்கள்....**

மயிலர்:- அப்ப....சிறிலங்காவின்ரை சிறார்களின் எதிர்காலம் தொலைந்து போய்க் கொண்டிருக்கெண்டு சொல்லுங்கோ.... தொலைக்காட்சியிலை எங்கடைபிள்ளைகள் தங்கடை நேரத்தைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மைதான் பாருங்கோ....

உலகில், நான் நன்றாகத் தெரிந்து கொள்ளவிரும்பும் ஒரே ஓர் ஆள் நான் தான். - ஆஸ்க்கார் ஒயில்ட்

# ஓநாய்களின் கூக்குரல்கள்

**யாழ்ப்பாணத்திலிருந்து** முன்னர் வெளிவந்த 'மத்து' என்ற நூலிற்கு மூத்த பத்திரிகையாளரும் தமிழ் ஆங்கில இலக்கிய வல்லுநருமான மதிப்புக்குரிய ஏ.ஜே.கணகரட்னா அவர்கள் ஓர் வித்தியாசமான முன்னுரை ஒன்றை எழுதியிருந்தார்.

"1956 இல் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்களச் சட்டத்திற்கு இந்நூல் சமர்ப்பணம் என்னை தமிழில் எழுதவும், தமிழில் சிந்திக்கவும் தூண்டியது 1956 தனிச்சிங்களச் சட்டம் தான் எனக் குறிப்பிட்டிருந்தார்.

இங்கு ஏன் இதனை நான் பிரஸ்தாபிக்கின்றேன் என்றால் 1956 தனிச்சிங்களச் சட்டம் சிங்கள பௌத்த பேரின வாதத்தின் அதி உச்ச விளைவாக ஒரு தமிழரை இவ்வாறு எழுதத் தூண்டியது என்பதைக் குறிப்பிடவே.

அதாவது இந்த இலங்கைத்தீவிற்குள் பௌத்த சிங்கள பேரினவாதம் சிங்களவர்களோடு கூடி வாழ்ந்த தமிழர்களை தமிழில் சிந்திக்கவும், தமிழில். எழுதவும் மட்டுமல்லாமல் தமிழர்களுக்கென ஒரு தனி நாட்டை அமைக்கவும் தூண்டியிருக்கிறது என்பதை குறிப்பிடுவதற்காகவே இதனை இங்கு குறிப்பிட்டேன்.

சிங்களத்தின் சிந்தனை என்பது சிங்களவரின் செயல் என்பது எப்போது தனித்து சிங்கள பௌத்தத்தை மையப்படுத்தி வெளிப்படத் தொடங்கியதோ அப்பொழுதே இலங்கை இரண்டாக உடைவதற்கான மாற்றத்திற்குள்ளாகத் தொடங்கி விட்டது.

இந்த மாற்றம் என்பது சிங்களவர்கள் தமிழர்கள் மீது அதிகவலுவுடன் தமிழர் மீது திணிக்கப்பட்ட அழுத்தம் என்பதே.

இது இலங்கைத்தீவின் அரசியல் அரிச்சுவட்டில் அரிய வாசகமாக இருக்கும் என்பது மெய்நிலை. அப்பொழுதுதான். தமிழர்கள் தங்களுக்காக தங்களின் நோக்கில் எதனையும் நோக்க தொடங்கினார்கள்.

ஏனென்றால் இலங்கையின் எல்லா அடிப்படை மாற்றங்களின் பிரதான காரணியாகபௌத்தசிங்கள பேரினவாதமே இருந்துள்ளது.

அதாவது இலங்கைத்தீவு இன்று வரை சந்தித்திருக்கும் வீழ்ச்சிகளெல்லாம் அது அரசியல் ரீதியாக இருந்தாலும் சரிதான் பொருளாதார ரீதியாக இருந்தாலும் சரிதான் அல்லது இராணுவ ரீதியாக இருந்தாலும் சரிதான் அது சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் ஏற்பட்ட வீழ்ச்சியாகவே இருக்கிறது.

இன்னும் தெளிவாகக் கூறினால் மேட்டுக்குடி சிங்களவரின் மனங்களில் வீங்கிப் பெருத்த பேரினவாதம் கிராமப்புறச் சிங்கள வர்களின் வயிறுகளை சுருங்கச்செய்தது.

சிங்கள நாற்காலி தலைவர்களின் கண்களுக்குள் அன்று பொங்கியெழுந்த பேரினவாதப் பார்வை தான் பின்னர் ஒவ்வொரு சிங்கள கிராமப்புற ஏழை இளைஞர்களை பாடையில் வீழ்த்தி வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் தெற்கிற்கு அனுப்பியது.

இதனை எத்தனைத் தூரம் சிங்களவர்கள் புரிந்துள்ளார்கள் அல்லது இதனை எத்தனைதூரம் சிங்களவர்கள் புரிந்து கொள்ள முயல்கிறார்கள். இவை இன்று தவிர்க்க முடியாதபடி எழுகின்ற கேள்விகள்.

உண்மையில் தமிழர்களின் எழுச்சியென்பது சிங்கள பௌத்தபேரினவாதத்திற்கு எதிரான புரட்சி என்பதே.

தமிழர்களின் உரத்த முழக்கம் என்பது சிங்கள பௌத்தவாதத்திற்கான தமிழர்களின் எதிர்வாதம் என்பதாகவே இருக்கும்.

**சிறி-இந்திரகுமார்**

இப்பொழுது ஏன் சிங்கள பேரினவாதம் பற்றி இப்பத்தியில் எழுதப்பட வேண்டியிருக்கிற தென்றால் இந்த சமாதான காலத்தில் போர்க்காலத்தில் முழங்கிய பீரங்கிகளையும் விட அதிகமாக தெற்கில் பேரினவாத பீரங்கிகள் முழக்கமிடத் தொடங்கியுள்ளன.

இப்பொழுதெல்லாம்



ஜே.வி.பிகாரர்களும் சிகல உறுமய காரர்களும் பச்சை இனவாதம் கக்கின்றனர். அதுவும் சமாதானத்திற்கு எதிராக இனவாதம் கக்கின்றனர்.

முன்பெல்லாம் இந்த இனவாதிகளின் ஏவிய கொடிய சொற்குண்டுகள் எல்லாம் இப்போது பல்கிப் பெருகி தமிழர்களோடு யாரெல்லாம் இன்முகம் காட்டுகின்றார்களோ அவர்கள் மீதும் வீழ்கின்றன.

அதிலும் இனவாதம் முற்றிய சிகல உறுமயவைச் சேர்ந்த திலக் கருணாரட்ன அண்மையில் விடுதலைப் புலிகளிற்கு எதிராக தற்கொலைப் படையொன்றை உருவாக்கப் போவதாக கூறியுள்ளார்.

இந்த பின்னணியில் இதனை. இப்பொழுது பேசுவது அவசியமாகின்றது இந்த இனவாதக்காரர்களிடமிருந்து தமிழர்கள் விழிப்பாக இருப்பதோடு இவர்களையும் இவர்களின் பின்னணியையும் நோக்க வேண்டியுள்ளது.

இப்பொழுது அதிகமாக தென்னிலங்கையில் பேரினவாதிகள் சிங்களவர்களை கொதிக்க வைக்கவும் படைதிரட்டவும் முயல்கிறார்கள். தாங்கள் உருவாக்கப்போகின்ற தற்கொலைப்படையினர் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையைப் போன்று மூளைச் சலவை செய்யப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள் எனவும் கூறுகின்றனர்.

இந்த இனவாதிகள் கூக்குரலிடுவது போல புலிகளின் கரும் புலிகள் பிரிவு தற்கொலைப்படையல்ல. அவர்கள் உண்மையில் தற்கொடைப் படை. சிகல உறுமயக்காரர்கள் கூறுவது போன்று மூளைச் சலவை செய்ய வேண்டிய தேவையில்லை.

அவர்கள் தமிழர்களிற்கு இழைக்கப்பட்ட அநீதிகளிலிருந்தும் அவலங்களிலிருந்தும் தோற்றம் பெற்றவர்கள்.

பலவீனப்பட்டுப் போயிருந்த தமிழினத்தை அல்லது தமிழினத்தைத் துடைத்துவிட சிங்கள தேசம் வன்முறையை கையாண்ட போது தழிழர் அரச வன்முறைக்கு எதிராக மேற்கொண்ட ஒரு உயரிய அரசியல் போர்வடிவம் தான் இந்த கரும்புலிகள்.

இங்கு நாம் நோக்க வேண்டியது சிகல உறுமய கூறும் சிங்கள தற்கொலைப் படையைப்பற்றியோ அல்லது சிகல உறுமயவையோ அல்ல.

மாறாக புலிகளின் மூளைச்சலவை செய்யப்பட்ட கரும்புலிகள் என குறிப்பிடுவது ஊடாக, தாம் உருவாக்க உள்ளதாக கூறும் தற்கொலைப் படையென்பது சிங்களவர்களை மூளைச்சலவை செய்யும் ஒரு இனவாதச் செயலே என்பதேயாகும்.

இந்த மூளைச் சலவைகளிற் கூடாக அவர்கள் விதைக்க முயலும் இனவாத வன்முறை தொடர்பாகவே.

இதன் விள்ளச்சலை

> **இனவாதிகள் அல்லது இந்த இனவாத தோன்றல்கள் தற்போதைய சமாதானத்தை கழுமரத்தில் ஏற்றவே பிரியப்படுகின்றார்கள்.**
>
> **அரசு முதலில் இனவாதிகளின் கூக்குரலிற்கும் செயற்பாடுகளிற்கும் மௌனமாகவிருந்து வழங்குகின்ற மௌன அங்கிகாரத்தை நீக்க முயற்சிக்க வேண்டும்.**
>
> **அல்லது அரசு மீதான அரசின் சமாதானத்தின் மீதான சந்தேகங்கள் வழுக்கவே செய்யும்.**

தமிழர்கள் பல ஆண்டுகளின் பின்பு தமிழர்கள் அறுவடை செய்ய வேண்டி ஏற்படுமா என்பது தொடர்பாகவே.

முன்பும் அரசின் போர் வன்முறைக்குள் சிக்கித்திணறிய தமிழ்மக்களிற்கான தீர்வு என்பது இப்பொழுதும் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குள் சிக்கித் திணறுகின்றது.

சிகல உறுமய கட்சி சிங்களவர் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற்ற ஒரு அரசியல் கட்சிஅல்ல தான். அதனை அவர்கள் நாடாளுமன்றிற்கு செல்ல அக்கட்சி எல்லாதொகுதிகளிலும் பெற்ற மொத்த வாக்குகளின் சராசரியில் கிடைத்த ஒரு 'போனஸ்' உறுப்பினர் என்பதிலிருந்தே புரிந்து கொள்ளலாம்.

ஆனால் இந்த சிகல உறுமய போன்ற கட்சிகளை தற்போதைய நடைமுறைச் சமாதானத்தைக் குழப்புவதற்காக பலமான மறைமுகக் கரங்கள் நிதி வலுவூட்டுவதுதான் பாரிய சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றது.

உண்மையில் இவர்களின் செயற்பாடுகள் எல்லாம் சமாதானக்கால அரசியல் செயற்பாடுகள் அல்ல மாறாக போர்க்கால அரசியல் செயற்பாடுகளே.

அதாவது இவர்கள் சமாதான காலத்தில் அரசியல் செய்ய முடியாத அசிங்கங்கள் இவர்கள் போர்காலத்தை மூலதனமாக்கி அரசியலாக்குபவர்கள்.

ஆனால் இந்த இன்வாதிகளையும் இந்த இனவாதிகளின் கருத்துக்களையும் அரசும் சர்வதேச உலகும் மறை முகமாக அங்கிகரிக்கின்றதோ என்ற சந்தேகங்கள் தோன்றுகின்றது.

இதனை உறுதி செய்யுமாப்போன்றே முன்னைய அரசுகளில் இனவாதிகளிற்கான அங்கிகாரம் இருந்துள்ளதற்கான சான்றுகள் உள்ளன.

எடுத்துக்காட்டாக தீவிர சிங்கள இனவாதிகளான சீ.பீ.டீ.சில்வா கே.எம்.பீ. ராஜரட்ண, நெவில் பெர்னாண்டோ, ஆர்.ஜி சேனநாயக்க, சிறில் மெத்தியூ போன்றவர்களிற்கு அமைச்சரவையில் இடமளிக்கப்பட்டிருந்ததை நாம் நினைவில் நிறுத்தலாம்.

அதிலும் நெவில் பெர்னாண்டோ போன்றவர்கள் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை நோக்கி உங்களை கழுமரத்தில் ஏற்ற வேண்டும் என கூறியவர்கள்.


நாம் இங்கே கூறுவது இந்த இனவாதிகள் அல்லது இந்த இனவாத தோன்றல்கள் தற்போதைய சமாதானத்தை கழுமரத்தில் ஏற்றவே பிரியப் படுகின்றார்கள்

அரசு முதலில் இனவாதிகளின் கூக்குரலிற்கும் செயற்பாடுகளிற்கும் மௌனமாகவிருந்து வழங்குகின்ற மௌன அங்கிகாரத்தை நீக்க முயற்சிக்க வேண்டும்.

அல்லது அரசு மீதான அரசின் சமாதானத்தின் மீதான சந்தேகங்கள் வழுக்கவே செய்யும்.

இனவாதிகள் பலப்படுவது அல்லது இனவாதிகளின் கருத்துக்கள் பலப்படுவதென்பது சமாதானம் பலவீனப்படுகின்றது என்பதையே காட்டும்.

இன்னொருவகையில் நோக்கினால் இனவாதிற்கு எதிர்வாதமாக இன்னொரு இனவாதம் தோற்றம் பெற வேண்டும் என சிங்கள இனவாதிகள் கருதுகின்றார்களா எனத் தமிழர் எதிர்வாதம் புரியலாமல்லவா?



நன்றி டெய்லி நியூஸ்


# செந்நிறக் கிரகம்

சி.விமலேந்திரன்

ஒளிச்சிதறல்கள் இல்லாத, இருண்ட வான்பரப்பை இரவில் பார்க்கும் போது மிக இரமியமாக இருக்கும். பகலில் சூரியனின் ஒளிர்வினால் மறைக்கப்பட்ட இவ்வழகிய வான்வெளியானது இரவில் சந்திரனின் மிளிர்வினால் மேலும் அழகூட்டப்படுகிறது. மேலும் சந்திரன் இல்லாத இரவொன்றில் விண்வெளியை எமது வெற்றுக் கண்களால் நோக்கினால்.... நான் எழுதவே வேண்டாம். நாங்கள் எல்லோருமே இந்த அழகிய இனிமையான அனுபவத்தைப் பெற்றிருப்போம். சிறியதும், பெரியதும், பிரகாசமானதும், மங்கலானதுமான ஏராளமான எண்ண முடியாத ஒளிப்பொருட்களுடன் எமது வானம் அழகாகத் தோன்றும். இன்றைய எமது விஞ்ஞான அறிவின்படி இந்த வானம் எமக்கு மட்டுமே சொந்தமானது. மேலும் ஒரு விஞ்ஞானியின் கருத்துப்படி கணக்குப்படி பூமியின் ஒவ்வொரு மனிதனுக்கும் 1007 நட்சத்திரங்களைச் சொந்தமாகக் கொடுக்கலாம். இந்த ஒளிப் பொருட்களை இனம்காண முயற்சித்த ஆரம்ப மனிதனின் முயற்சியே, இன்று மூக்கின் மேல் விரல் வைத்து ஆச்சரியப்படும் அளவிற்கான விண்வெளிப் புதினங்களை எமக்குத் தந்துள்ளது. அறிவியல் என்றவுடனேயே சாதாரண மனிதனுக்கு முதலில் வருவது விஞ்ஞானம்அதுவும் விண்வெளி விஞ்ஞானம் தான் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை.


தமது வெற்றுக் கண்களையும், மூளையையும் மூலதனமாகக் கொண்ட எமது முன்னைய வானவியலாளர்களால் சில நட்சத்திரங்களும் சில கோள்களும் இனம் காணப்பட்டன. அவற்றில் ஒரு கோள்தான் செவ்வாய் ஆகும். ஏறக்குறைய இரத்தச் சிவப்பு நிறமான இந்தச் செந்நிறக்கோள் அன்றைய மனிதனின் அறிவுக்கு ஏற்ப அதன் நிறத்தைக் கொண்டே விளங்கிக் கொள்ளப்பட்டது. நம்மவர்கள் இந்தச் செவ்வாயிற்கு என்னென்ன சிறப்பையும் பெருமைகளையும் கொடுத்தார்கள் என்பதும் எமக்குத் தெரியும். இன்றும் கூட செவ்வாய் என்றதும் சாதாரண மனிதர்கள் முதல் புத்திஜீவிகளானவர்கள் வரையில் மனதில் முதலில் எழுவது என்ன? திருமணமாகாத எத்தனையோ பெண்கள் தான் முதலில் எமது மனக்கண்ணில் தெரிவார்கள். ஒரு காலத்தில் கிரேக்கர்களின் கோபத்தின் கடவுளாக இந்தச் செவ்வாய் இருந்தார். ஒவ்வொரு இன மக்களும் தத்தமது மதப் பின்னணிக்கு ஏற்ப செவ்வாயிற்கு பெயரிட்ட போதும் ரோமர்களின் போரின் கடவுளின் பெயராகிய MARS என்ற பெயரே ஆங்கிலத்தில் நிலைத்து விட்டது.

TERRESTIAL PLANETS என்பது பூமியை ஒத்த பாறை உலகங்களைக் குறிக்கும். இவை உட்சூரியத் தொகுதி (INNER SOLAR SYSTEM) எனவும் கூறப்படும். இக்கிரகங்கள் புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் ஆகிய நாலும் ஆகும். வியாழன், சனி, யூரேனஸ், நெப்ரியூன் நாலும் JOVIAN PLANETS எனப்படும் பிரமாண்டமான வாயு உலகங்கள் ஆகும். இந்த நாலு ஜோவியன் கிரகங்களும் புளூட்டோவும் சேர்ந்து OUTER SOLAR SYSTEM- வெளிச் சூரியத் தொகுதி எனப்படும். பாறை உலகங்கில் ஒன்றான, செவ்வாய் பற்றி விஞ்ஞான ரீதியில் எமக்குத் தெரிந்தவற்றை ஞாபகத்திற்குக் கொண்டு வருவோம். செவ்வாய் பற்றி எமக்கு மிகச் சொற்ப அளவே தெரியும். பூமியில் இருந்து சூரியனுக்கு எதிராக பயணம் செய்தால் முதலில் வரும் கிரகம் (கோள்) செவ்வாய் ஆகும். இது நமது பூமியின் பருமனின் அரைப்பங்கு பருமனும் பத்திலொரு பங்கு திணிவும் கொண்டது. தனது முனைவுகளில் பனிப்படிவங்களைக் கொண்ட செவ்வாய் பூமியைவிடக் குளிர்ந்த ஒரு கோள் ஆகும். இக்கோள் தன்னைத்தானே ஒரு தடவை




சுற்றுவதற்கு 24½ மணித்தியாலங்கள் எடுக்கும். அத்துடன் தன் அச்சில் தன்னைத்தானே சுற்றுகையில் சூரியனையும் சுற்றி வருவதால் நமது பூமியில்உள்ளது போல் செவ்வாயிலும் நாலு பருவகாலங்கள் உண்டு. பூமியில் இருந்து செவ்வாயில் சுழற்சியை அவதானித்தால் கிழக்கு முகமான அதன் அசைவு சில காலங்களுக்கு மேற்கு முகமாக இருந்து பின்னர் மீண்டும் கிழ க்கே அசைவது போல் தோற்றும். பூமியின் வேகமான அசைவே இந்தத் தோற்ற வேறுபாட்டசைவுக்குக் காரணம். சூரியனைச் சுற்றி வரும் செவ்வாயின் பாதையானது பூமியினது பாதையைவிடப் பெரிய நீள்வளையப் பாதை ஆகும்.

செவ்வாயின் மேற்பரப்பு சந்திரனின் மேற்பரப்புப் போன்றே குன்றும் குழியுமாய் ஒழுங்கற்ற மேற்பரப்பாக அமைந்துள்ளது. இதில் ஏராளமான எரிமலைக் குன்றுகள் உள்ளன. சில எரிமலைக் குன்றுகள் இமய மலையைவிடப்



பெரியனவாகக் காணப்படுகின்றன. செவ்வாயின் மையப்பகுதியில் இரும்புச் செறிவு அதிகமாகக் காணப்படுகிறது. மேற்பரப்பில் அதிக அளவு இரும்பு ஒக்சைட்டு (Iron Oxide) துரு இருப்பதனாலேயே செவ்வாய் செந்நிறமாகக் காணப்படுகிறது. காபனீரொட்சைட்டுச் செறிவு அதிகம் உள்ள செவ்வாயின் வளிமண்டலம் மிகமிக ஐதானது. துருவப் பகுதிகளில் வளிமண்டலத்தின் ஒரு பகுதி உறைய, மிக வேகமாக வரும் சூரியக் காற்று தினம் தினம் செவ்வாயின் வளிமண்டலத்தின் சிறுபகுதியை தன்னுடன் அள்ளிச் செல்கிறது.



போபாஸ் (phobos)· டேய்மோஸ் (deimos) எனும் இரண்டு சந்திரன்களைக் கொண்ட செவ்வாயை எமது வெற்றுக் கண்களால் வான்பரப்பில் காணலாம். எமது சூரியத்தொகுதியில் உள்ள எல்லாக் கோள்களிலும் செவ்வாயே எமது பூமியை அதிகம் ஒத்திருக்கின்றது. எனவே நமது முன்னவர்கள் ஒருவேளை செவ்வாயில் உயிரினங்கள் ஏதாவது இருக்குமா அல்லது இருந்திருக்குமா எனச் சந்தேகம் கொண்டார்கள். அதன் விளைவாக தமது காலப் பகுதிகளில் தங்களின் இயல்புகளுக்கு ஏற்பச் செவ்வாயை ஆராயத் தொடங்கினார்கள். தமது முடிவுகளையும் காலத்திற்குக் காலம் உலகிற்குத் தெரிவித்தார்கள். இவர்களில் யூரேனசை உலகிற்கு இனம் காட்டிய வில்லியம் ஹேர்ஷெலும் (WILLIAM HERSCHEL) புளூட்டோவை இனம் கண்ட பேசிவல்லோவெல்லும் (PERCIVAL LOWELL) பிரசித்தமானவர்கள். திரு.லோவெல்லின் கருத்துப்படி செவ்வாயில் புத்திஜீவிகளான உயிரினங்கள் உள்ளன. அவை தமது பாலைவனத்தை ஒத்த நிலப்பகுதிகளுக்கு பாரிய கால்வாய்களை வெட்டித்துருவப் பகுதிகளில் இருந்து நீரைக் கொண்டுவருகின்றார்கள். பத் தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதிகளில் இந்த கலகலப்பான செய்தி உலகமெங்கும் பரவியது. இச்செய்தியின் பின்னணியில் பல வியப்பான விடயங்கள் நமது பூமியில் நடைபெற்றன. Orsonwells என்ற நடிகர் 1938 ஆம் ஆண்டில் ஒலிபரப்பிய வானொலி நாடகத்தில் செவ்வாய் வாசிகள் NewJersey நகரத்தை பலாத்காரமாக ஆக்கிரமிப்பது போன்ற காட்சி ஒன்று ஒலிபரப் பப்பட்டது. அவரது நாடகத்தால் பயந்த பல நூற்றுக் கணக்கானோர் எல்லாவற்றையும் அப்படியே விட்டுவிட்டு தமது மோட்டார் வண்டியை (Car) எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடிவிட்டனர். இல்லாத செவ்வாய் கிரகவாசிகள் தமது இடத்தை ஆக்கிரத்து தமது உயிருக்கு ஆபத்தை விளைவித்து விடுவார்களோ என்று பரப்பாக அவர்கள் ஓடியது இன்று நகைச் சுவையாக இருந்தாலும் அன்று செவ்வாயில் மனிதர்களை ஒத்தஉயிரினம் உண்டு என்று எவ்வளவாக நம்பினார்கள் என்பதற்கு இது ஒரு நல்ல சான்று.

நெடுங்காலமாக மனித இனம் செவ்வாயில் உயிரினம் உண்டு என்று ஏதோ ஒரு குருட்டு நம்பிக்கையின் அடிப்படையில் உறுதியாக நம்பி இருந்தது. அமெரிக்காவின் மரீனர்-4 என்ற விண்கலம் 1964 ஆம் ஆண்டு செவ்வாய் கிரகத்திற்கு சென்று செவ்வாயில் ஆய்வு செய்யும் வரை இந்த எண்ணம் இருந்தது என்றே சொல்ல வேண்டும். அதற்குஅடுத்த வருடம் செவ்வாயின் மேற்பரப்பில் இருந்து ஆறாயிரம் மைல்கள் தொலைவில் இருந்து மரீனர்-4-19 புகைப் படங்களை பூமிக்கு அனுப்பியது. இப்புகைப்படங்கள் செவ்வாயில் எந்தவொருநீர் நிலையும் காணப் படவில்லையென்பதையும் எந்தவொரு உயிரினத்தின் சுவடுகளோ தெரியவில்லை என்பதையும் காட்டின. மீண்டும் 1971 ஆம் ஆண்டு செவ்வாயை ஆய்வு செய்யச் சென்ற மரீனர் -9 கலத்தின் படங்கள் இம் முடிவுகளை உறுதிப்படுத்தின.

செவ்வாயில் உயிரினம் இருந்திருக்குமா என்ற கேள்விக்குச் சென்றது. அதன் அடிப்படையில் இன்னமும் பல கேள்விகள் எழுந்தன. முன்னர் செவ்வாய் சூடாகவும் ஈரலிப்பாகவும் இருந்ததா? ஆயின் அந்த ஈரலிப்பை கொடுத்த நீருக்கு என்ன நடந்தது. செவ்வாயின் வளிமண்டலம் எப்படியானது? இவற்றுக்கு விடைகாண்பதற்காக பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. சில வெற்றியளித்தன. சில தோல்வியில் முடிவடைந்தன.

பூமியில் உள்ள உயிரினங்களுக்கு நீர் மிக அவசியம். அதை ஆதாரமாககொண்ட தேடுதலில், செவ்வாயில் பல கால்வாய்கள் இருப்பது காணப்பட்டது. பெரும்பாலும் மலை உச்சியிலிருந்து கீழாக பல கால்வாய்கள் தனித்தனியாக வந்து ஒன்றாக இணைந்து தனிக்கால்வாய்ஆகக் காணப்பட்டன. ஆய்வாளர்களின் கருத்துப்படி இவை இயற்கையில் அமைந்த நீரோட்டத்தினாலேயே உருவாகி இருக்கவேண்டும். நீரோட்டம் ஒன்றுதான் இவ்வகையான இயற்கைக் கால்வாய்களை உருவாக்கமுடியும் என்பது அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கை. எனவே முன்னர் ஒரு காலத்தில் செவ்வாயில் நீர் இருந்திருக்கின்றது என்பது அவர்களது முடிவு. ஆனால் இன்று உள்ள செவ்வாயின் வெப்பநிலைக்கு நீரானது உறைந்து விடவேண்டும். அவ்வாறாயின் எந்தவொரு கால்வாயும் நீருடன் இன்று காணப்படமுடியாது. எனவே முன்னர் ஒரு பொழுதில் செவ்வாயின் வெப்பநிலை இன்று இருக்கும் வெப்பநிலையை விட உயர்வாக இருந்திருக்க வேண்டும். சூரியனில் இருந்து செவ்வாயின் தூரம் இதற்குச் சாதகமில்லை. எனவே இது எப்படிச் சாத்தியம்? ஒரு காலத்தில். உயிர்ப்புடன் இருந்த எரிமலைகள் செவ்வாயிற்குப் போதுமான வெப்பத்தைக் கொடுத்து அதன் வெப்ப நிலையை உயர்வாக வைத்திருக்கலாம். அதன் காரணமாக செவ்வாயில் நீர் பாய்ந்து ஓடியிருக்கலாம். இந்நிலையில் செவ்வாயில் உயிரினங்கள் தோன்றி வாழ்ந்து இன்று செவ்வாய் வரண்டு விட அழிந்திருக்கலாம் என்கிறார்கள் சில வானவியலாளர்கள்.

1976 இல் அனுப்பப்பட்ட வைக்கிங் 1(viking 1), வைகிங் 2 (viking2) எனும் அமெரிக்க விண்கலங்கள் செவ்வாயில் வெற்றிகரமாக இறங்கிச் செவ்வாய் மண்ணை ஆய்வு செய்தன. வளிமண்டலத்தை ஆய்வு செய்தன. அதன்படி செவ்வாயின் வளிமண்டலம் 95% காபனீரொட்சைட்டு வாயுவாலும் மீதி நைதரசனாலும் ஆகன் வாயுவாலும் சேர்ந்து காணப்பட்டது. மண்ணின் பரிசோதனையின் ஆரம்பத்தில் உயிரினம் இருக்கலாம் போன்று தோன்றினாலும் இறுதியில் உயிரினம் இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டிஇருந்தது. செவ்வாயின் மேற்பரப்பில் காபன் மூலகம் இல்லை. எனவே எந்தவொரு உயிரினமும் இருக்கமுடியாது என்ற முடிவுக்கே வரவேண்டும் என்றாயிற்று.

முடிவாக விஞ்ஞானிகளின் கருத்துப்படி இன்று செவ்வாயில் உயிரினம் எதுவும் இல்லை. பூமியின் வளிமண்டலத்தின் 1/100 மடங்கு ஐதான வளிமண்டலம் கொண்ட செவ்வாயின் வளி மண்டலத்தில் பாரமான, உயிர்வாழத் தகுதியில்லாத வாயுக்களே உள்ளன. மேலும் செவ்வாயின் மேற்பரப்பில் உயிர்ச்சுவடுகள் எதுவுமே இல்லை. திரவநீர் எதுவுமே இல்லை. ஒருவேளை சில மில்லியன் வருடங்களுக்கு முன்னர் செவ்வாயில் திரவநீர் இருந்திருக்கலாம். உயிர்ப்பான பல எரிமலைகளினாலும், விண்கற்களின் மோது கையினாலும் ஏற்பட்ட வெப்பத்தால் செவ்வாயின் வெப்பநிலை இன்று உள்ள வெப்பநிலையிலும் உயர்வாக இருந்த அந்தக் காலப்பகுதிகளில் உயிரினங்கள் இருந்திருப்பதற்குச் சாத்தியம் உண்டு.

இன்னமும் கூட விஞ்ஞானிகளின் மனதில் ஒரு மூலையில் "செவ்வாயும் உயிரினமும்" என்ற தலைப்பு உறுத்திக்கொண்டே இருக்கின்றது. செவ்வாயின் ஆய்வு இன்னமும் ஓய்ந்து விடவில்லை. மனிதன் செவ்வாயை தனது விண்வெளிப்பயணத்தின் தரிப்பு நிலையங்களில் ஒன்றாக வைத்திருக்கலாம் என்ற எண்ணத்தில் பார்க்கிறான். மேலும் செவ்வாயில் ஒரு செயற்கை உலகத்தைக் கூடத்தோற்றுவித்து குடியேற்றம் ஒன்றைக் கூட ஏற்படுத்தும் எண்ணமும் மனிதனுக்கு உண்டு. இவை எல்லாம் மனிதனின் எதிர்காலத்திட்டங்கள்.




## அத்தியாயம்-08

ஆங்கில மூலம் பிளானறி ஓ கொனரின்

# இடம் பெயர்ந்தவன்

தமிழில் சு.மகேந்திரன்

ஆனால் சொல்லவில்லை.

சோட்லி நித்திரையாகி விட்டதுபோல் பாவனை செய்தான். எந்த நீகிரோவிற்கும் தனக்கு சிநேகிதன் ஒருவட. இருந்தாலும் அது பற்றி விளங்குவது உனக்கு ஒன்று சொல்லவேண்டும். கௌசக்கின் மகனிடம் இருந்து பலவற்றை கறந்துள்ளேன். அவன் தான் போலந்தில் கல்வீட்டில் வசித்ததாகவும் ஒரு இரவில் ஒருவன் வந்து விடிவதற்கு முன்வெளியேறச்சொன்னதாகவும் கூறினான். நீ அவர்கள் ஒரு கல்வீட்டில் வசித்தார்கள் என நம்புகிறாயா?

'எல்லாம் பொய்யே அது காற்றுடன் போனது போன்றது தான். எனக்கு மரப்பலகையிலான வீடேபோதும். சான்சி (மிஸ்ரர் சோட்லி) இந்தப் பக்கம் திரும்பு' என்றாள்: 'நீகிரோக்கள் ஆதரிக்கப்படாமல் இங்கிருந்து வெளியேற்றப்படுவதை நான் வெறுக்கிறேன் நான் நீகிரோக்களிடமும் வறிய மக்களிடமும் அளவில்லாத இரக்கம் கொண்டவள். நான் அப்படி இருந்ததில்லையா? நீகிரோக்களிடமும் வறியமக்களி டமும் மிகுந்த சிநேகபாவத்துடன் எப்போதும் இருந்திருக்கிறேன்.'

'நேரம் வரும் போது நீகிரோக்கள் பக்கம் நிற்பது என முடிவெடுத்துவிட்டேன். அந்தப் பாதிரி இங்கிருந்து எல்லா நீகிரோக்களையும் அகற்றுவதற்கு நான் விடப்போவதில்லை.'


மிஸிஸ் மக்கின்ரயர் புதிய உழவியந்திரம் ஒன்றையும் விதைக்கும் கருவியையும் வாங்கினாள். உழவியந்திரத்தில் தானியங்கு உயர்த்தியும் இருந்தது. 'இப்போது தான் இவற்றை இயக்கத்தெரிந்த ஒருவன் கிடைத்திருக்கிறான். அவளும் மிஸிஸ் சோட்லியும் உழவியது எப்படியிருக்கிறது என பார்வையிட வயலுக்குச் சென்றனர். செந்நிற அலைகள் போல் தோன்றிய பூமியைப்பார்த்து 'என்ன நேர்த்தியான முறையில் உழவுசெய்யப்பட்டிருக்கிறது' என மிஸிஸ் மக்கின்ரயர் கூறினாள்.

இடம் பெயர்ந்தவன் வேலைக்கு வந்த பின்பு மிஸிஸ் மக்கின்ரயரின் போக்கில் ஏற்பட்ட மாறுதல்களை மிஸிஸ் உன்னிப்பாக அவதானித்து வந்தாள். அது ஒருவன் இரகசியமாக பணக்காரன் ஆகிக்கொண்டு வரும் போது, அவனில் ஏற்படும் மாறுதல் போல் இருந்தது. அவள் வழக்கமாக மிஸிஸ் சோட்லியில் கொண்டிருந்த நம்பிக்கை முன்பிருந்தது போல் இருக்கவில்லை. இம் மாற்றங்களுக்கான அத்திவாரம் பாதிரியே என மிஸிஸ் சந்தேகப்பட்டார். அவர்கள் எல்லாம் எவ்வளவு இனிமையாகவும் புத்திசாலித்தனமாகவும் நடக்கிறார்கள். அந்தப்பாதிரி மிஸிஸ் மக்கின்ரயரை காலக்கிரமத்தில் தனது தேவாலயத்திற்கு மாற்றிக் கொண்டு போகத்தான் போகிறான். பின் அவளது வங்கிப் புத்தகத்தில் கைவைப்பான். இந்த இடம் பெயர்ந்தவன் அவளை கீழே தள்ளி வீழ்த்தப் போகிறான் என்ற இரக சியம் தனக்கு தெரியும் என மிஸிஸ் சோட்லி நினைத்தாள். அதனை தனக்கும் தனது கணவருக்கும் இடையில் மட்டுமே இரக சியமாக வைத்திருக்க அவள் விரும்பினாள்.

'அவன் தொடர்ந்தும் 70 டொலர் சம்பளத்தில் வேலை செய்யமாட்டான் என இப்போதும் அடித்துச் சொல்வேன்.' எனத் தனக்குள் மிஸிஸ் சோட்லி முணுமுணுத்தாள். 'சரிதான்' என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர். 'சில உதவியாளர்களை விட்டுத்தொலைத்தால் நான் அவனுக்கு அதிக சம்பளம் கொடுக்கமுடியும்.'

கடந்த சில காலமாக இது தனக்குத் தெரியும் என்ற தோரணையில் மிஸிஸ் சோட்லி தனது தலையை ஆட்டினாள். 'இந்த நீகிரோக்களுக்கு இப்படித்தான் வரும் என்று எனக்குத் தெரியாது என நான் சொல்லவில்லை. தங்களுக்குத் தெரிந்த அளவில் எந்த வேலையையும் நீகிரோக்கள் திறம்படவே செய்வர் அவர்களுக்கு என்ன செய்யவேண்டும் எனக் கூறிவிட்டு, அவ்வேலை முடியும் வரை பக்கத்திலேயே நிற்க வேண்டும். அதுவே உள்ள கஸ்டம்.'

இப்படித்தான் 'நீதிபதியும் கூறுவார்.' என்றாள் மிஸிஸ் மக்கின்ரயர் நீதிபதியான அவளது முதற்கணவரே இவ்விடத்தை அவளுக்கு அளித்து விட்டு சென்றது. அவள் தனது 35ஆவது வயதில் 75 வயது நீதிபதியை மணந் தவள் என மிஸிஸ் சோட்லி கேள்விப் பட்டிருந்தாள். அவர் இறந்தபின்பு பணக்காரி ஆகிவிடலாம் என்ற எண்ணத்திலேயே அவரை அவள் மணந்தாள். ஆனால் அந்த மனிதனோ ஓர் அயோக்கியனாக இருந்தான். அவருடைய மரணத்தின் பின் எஸ்ரேட் சம்பந்தமான விஷயங்களைப் பார்த்த போது, அவரிடம் ஒரு சல்லிக் காசும் மீதமில்லாமல் இருந்தது தெரிந்தது. அவர் 50 ஏக்கர் நிலத்தையும், வீட்டையும் மட்டுமே விட்டுச் சென்றிருந்தார். ஆயினும் அவரைப்பற்றி பேசும் போதெல்லாம், 'ஒருவனது துன்பம் மற்றவனுக்கு லாபத்தைக் கொடுக்கிறது, தெரிந்த பிசாசு தெரியாததைவிட மேல்' போன்ற அவர் பேசும் போது பாவிக்கும் மேற்கோள்களை கூறியபடியே இருப்பாள்.



'எப்படியாயினும் தெரிந்த பிசாசு தெரியாததைவிட மேல்' என சுட்டிக்காட்டுவது போல் மிஸிஸ் சோட்லி கூறினாள். தான் சிரிப்பதை மிஸிஸ் மக்கின்ரயர் பார்த்துவிடக்கூடாது என மறு பக்கம் திரும்பிக் கொண்டாள். இடம் பெயர்ந்தவனால் அஸ்ரருக்கும் சல்க்கிற்கும் வரப்போவதை தான் அறிந்துள்ளதாகவும் அதை சோட்லிக்கு மட்டுமே கூறியுள்ளதாகவும் அவள் கூற, சோட்லி கல்லறையில் இருந்து எழுந்த லச றாஸ் போல் எழுந்து நின்றான்.

'உன்னுடைய வாயை மூடு' என்றான் சோட்லி.

அவள் 'நான் சொல்வது சரியானது என்றாள்.'

'இல்லை பிழையானது.' அவள் திரும்பவும் 'நான் சொல்வது சரி' என்றாள். சோட்லி திரும்பவும் கிடையாக விழுந்து படுத்தான்.

(தொடரும)

# பன்முகம் -19

# தனித்தமிழ்

தனித்தமிழ், தூயதமிழ் பேச வேண்டும், எழுதவேண்டும் என்ற கருத்து உயர்வானது. இது தாய் மொழிப்பற்றின் உச்சநிலை - ஆனால் இந்த உச்ச நிலையை எல்லோராலும் எட்ட முடியுமா? என்பது கேள்வி.

வடமொழிக்கலப்பும், ஏனைய மொழிகளின் கலப்பும் தமிழின்



தூய்மைத்தன்மையைக் குறைத்துவிட்டன என்பதும் உண்மை. இதனாற்தான் தனித்தமிழ் வளர்க்க விரும்பிய வேதாசலம் சுவாமிகள் தனது பெயரை மறை மலை அடிகள் . (வேதம்+ மறை, அசலம்=மலை, சுவாமிகள் = அடிகள்) என்றும் சூரிய நாராயண சாஸ்திரங்கள் தன்பெயரை பரிதி மாற்கலைஞன். (சூரியன் = பரிதி, நாராயணன்=மால், சாஸ்திரிகள் =கலைஞர்) என்றும் மாற்றிக் கொண்டனர். ஆனால் எந்த அளவுக்கு தனித்தமிழ் முயற்சியில் வெற்றிகண்டனர் என்பது வினாக்குறியே.

தமிழிலே இல்லாத ஓசைகளுக்காக பிறமொழி எழுத்துக்களுக்குப் பதிலாக தமிழ் எழுத்துக்களை மட்டும் பயன் படுத்துவது என்பது தமிழையும் பிற மொழியையும் கொச்சைப் படுத்துவதாகும்.

உதாரணத்துக்கு ஜலம் என்பதற்கு சலம் என்றும், ஜனாதிபதி என்பதற்குப் பதிலாக சனாதிபதி என்றும் ஜென்மம் என்பதற்குப் பதிலாக சென்மம் என்றும் வட எழுத்துக்களைத் தவிர்த்து தமிழ் எழுத்துக்களை பயன்படுத்தும் போது எழுத்துக்கள் தான் தமிழ் எழுத்துக்களாகின்றனவே தவிர சொற்கள் தமிழ்ச் சொற்களாக மாறிவிடமாட்டா.

இதனை இன்னுமொரு விதத்தில் பார்த்தால் தமிழுக்கே பெருமை சேர்த்துத்தரும் தனித்துவமான எழுத்து 'ழ'கரம். தமிழின் சேய்மொழிகளுள் ஒன்றான 'மலையாளத்'தில் இந்த 'ழ'கர உச்சரிப்பு தமிழர்களைவிட மிகச்சிறப்பாகப் பயன் படுத்தப்படுவதாக எனக்குத் தோன்றுகின்றது. இந்த 'ழ'கர எழுத்து இல்லாத ஏனைய மொழிகள் 'தமிழ்' என்னும் சொல்லை 'தமில்' என்றும் 'வாழைப்பழத்'தை 'வாலைப்பலம்' என்றும் 'குழந்தையை' 'குலந்தை' என்றும் 'அழகு' என்பதை 'அலகு' என்றும் அம்மொழிகளில் உள்ள ஓசை எழுத்துக்களுக்கு அடங்கலாக உச்சரிப்பின் அது ஒருவிதத்தில் மொழிக்கொலை என்பதே உண்மை.

இதையும் ·விட இன்னு மொரு கவலைக்குரிய விடயம் என்ன வென்றால் 'ஷேக்ஸ்பியர்' என்னும் பெயரை செகசிற்பியர் என்றும், செகப்பிரியர் என்றும் பெயரின் பொருளையே மாற்றி எழுதுவது சரியாக தமிழில் உரிய ஓசைகளுக்குரிய எழுத்துக்கள் இல்லாவிடில் பிறமொழிச் சொற்களைக் கொலை செய்ய எமக்கு என்ன உரிமை இருக்கின்றது.

தூயதமிழ் என்று சொல்கின்றோமே தமிழுக்குரிய எண்கள் க..உ.. என்ற வடிவங்களில் உள்ளனவே. எனவே எமக்குரிய எண்களை மட்டும் ஒதுக்கிவிட்டு சொற்களை மட்டும் பிறமொழி ஓசைசேர்ந்தது என்பதற்காக. பிறமொழிச் சொற்கள் என்பதற்காக. சாதாரண பாமர மக்களும் தூய தமிழ் பேச வேண்டும் என எதிர்பார்ப்பது தவறு. தவிர. .அரபு,சீன, ஜப்பானிய மொழிகளைப்பின்பற்றி அவர் தம்மொழிக்கே உரிய இலக்கங்களைப் பயன்படுத்துவது போன்று நாமும் ஏன் தமிழ் மொழிக்கே உரிய இலக்கங்களைப் பயன் படுத்தக் கூடாது.

திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களிலும் ஆக.12 வடமொழிச் சொற்களே இருப்பதாக அண்மையில் யாரோ சொன்னார்கள். ஒரு குறள்ப்பாவில் ஏழு சொற்கள் என்றால் மொத்தம் 1330 x 7 = 9310 சொற்கள். இதில் 12 வட சொற்களும் கழிக்கப்பட்டால் மீதமுள்ள 9298 தூய தமிழ் சொற்கள் அடங்கிய திருக்குறளை இன்று புரிந்து கொள்ளக் கூடிய தமிழர்கள்யார்?

பிற மொழிச் சொற்களை உச்சரிக்கும் போது ஓசை பிறழக்கூடாது என்பதற்காகத்தான் எம்முன்னோர். ஜ.ஷ.ஹ.ஸ. போன்ற பிற மொழி ஓசைகளுக்கு எழுத்துருவத்தைக் கொடுத்துள்ளனர் என்பதே எனதுகருத்து. எனவே தமிழ் தொண்டியற்றும் எம் அறிஞர்கள் காலத்துக்கேற்ற பரிணாம வளர்ச்சி பெற்று வரும் பிற மொழிகளுக்கு ஈடு கொடுக்கக் கூடிய விதத்தில் தமிழில் சொற்களை உருவாக்க வேண்டும். தவிர்க்க முடியாத பிறமொழிச்சொற்களைப்பயன் படுத்த வேண்டிவரும் போது பெருமனதோடு ஓசை திரிபடையாமல் உச்சரிக்க அனுமதிக்கவும் வேண்டும் என்பது எனது பணிவான வேண்டுகோள்.

ஈழத்தமிழனின் தனித்தமிழ் அறிவு ஏனையவர்களுக்கு எந்தவிதத்திலும் குறைந்ததல்ல என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு. இச்சம்பவத்தை திரு.முல்லை மணி அவர்கள் தனது "வன்னியியற் சிந்தனை" எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.

மறைமலை அடிகளார் தனது மகளுக்கு சுயம்வரம் ஒன்றை ஏற்பாடு செய்தார். தொடர்ந்து பதினைந்து மணித்துளிகள் பிறமொழிக் கலப்பில்லாத தூய தமிழில் பேசுபவருக்கு தன்மகளைக் திருமணம் செய்து கொடுப்பதாக நிபந்தனை விதித்திருந்தார்.

இந்தச் சுயம்வரத்தில் கலந்து கொள்ள இந்நிபந்தனையை ஏற்று அன்று பல இளைஞர்கள் சென்றிருந்தனர். அந்த இளைஞர்களில் ஒருவர் வவுனியா திசை விளங்க முதலியார் பரம்பரையில் வந்த திரு.வ.சு.இராசஜயனார்..வ.சு. இராசஜயனாரின் நோக்கம் மறைமலை அடிகளின் மகளை மணம் செய்வதல்ல. ஈழத்தமிழனான தன்னாலும் தனித்தமிழ் பேசமுடியும் என்பதினை நிரூபிப்பதே .

வ.சு. இராசஜயனாரின் முறை வந்தபோது. அப்பழுக்கில்லாத தூய தமிழில், பிறமொழிச் சொல் ஒன்று தானும் கலவாமல் மிக நேர்த்தியாக பதினைந்து மணித்துளிகள் பேசினார். தனது உரையின் முடிவில் வேண்டு மென்றே 'நமஸ்காரம்' என்று வட மொழியில் கூறிவிட்டு வந்தமர்ந்து கொண்டாராம்.

நாவண்ணன்

தகுதிச் சிறப்பிற்கு ஒளி விளக்கம் தரும் மெழுகுத்திரி தன்னடக்கம். – ஹென்ரிஃபீல்டிங்.



## சிறுகதை

# பழிதுடைத்தல்

செபமாலைக்கிழவர் படகை மூசிவலித்துக் கரை சேர்த்த போது வயதுக்கு மீறிய உற்சாகத்துடன் காணப்பட்டார். அவரது உற்சாகத்துக்குக் காரணம் வங்கக்கடல் அன்னை பரிசளித்த மீன் குவியலின் கனதிதான். மீன்பறியைத் தூக்க மாட்டாமல் தூக்கிக்கடற்கரை மணலில் குந்தவைத்து நெற்றி வியர்வையை வழித்துக் கொட்டுவதற்கும் கற்பி கடகத்துடனும் வட்டச்சுளகுடனும் வருவதற்கும் சரியாக இருந்தது.

மீன் பறியைக் கவிழ்த்துக்குவிக்க மீன் கொத்திப்பறவைகள் விர் என்று பறந்து வந்து சில மீன்களைக் கொத்திக்கொண்டு அவர் தலைக்கு மேலால் பறந்தன " சூய்... நாசமாய்ப் போனதுகள் அள்ளிக்கொண்டு போட்டுதுகள்'' என ஒரு பாட்டம் திட்டித்தீர்த்து விட்டுக் கற்பியைப் பாத்தார். பாவம் அவள். அவளின் கணவன் வவுனியா வியாபாரத்துக்குச் சென்றவன் திரும்பி வரவேஇல்லை. எவ்வளவு முயீன்று தேடியும் பயனில்லை. அவன் நினைவாக விட்டுச் சென்ற இரண்டு பெட்டைக்குஞ்சுக்களை வளர்க்க வேண்டுமே எனத் தூக்கிய நார்க் கடகமும் வட்டச்சுளகும் அவளுடன் நிரந்தரமாகிவிட்டன.

ஒரு வாரத்துக்குப் பின்னர் செபமாலையர் இன்றுதான் கடலுக்குச் சென்றார். நேவிக்கப்பலிலிருந்து சரமாரியாக வீசப்படும் ஷெல் மாரி இன்றுதான் ஓய்ந்திருந்தது.

ஷெல் வீச்சு என்றதும் அன்றொருநாள் ஷெல் வெடித்துச் சிதறியதால் வயிறு கிழிந்து சாவைத் தழுவிக்கொண்ட அந்தோனியின் நினைவு அவரை ஆக்கிரமித்தது. செபமாலைக்கும் அன்னம்மாவுக்கும் அந்தோனியாரின் அருளால் கிடைத்தவன் தான் அந்தோனி. தந்தையையும் மிஞ்சிய தொழிலாளியாய் வீச்சுக்கார அந்தோனி எனப் பெயர் வாங்கிய பின்புதான் அவன் மேரியைத் திருமணம் செய்தான்.

மகனை இழந்த சோகம் வற்றுவதற்கு முன்பே மருமகள் மேரியும் இளைய பேரனும் நெருப்புக் காய்ச்சலால் செத்துப்போனார்கள். நெருப்புக்காய்ச்சல் குளிசை ஆஸ்பத்திரிக்கு வந்துசேர இன்னும் இரண்டு மாதம் எடுக்குமாம்.

பதினொருமணி வெய்யில் முதுகிலே சுள்ளென்று உறைத்த போதுதான் கிழவரின் நினைவுச்சரம் அறுபட்டது.

கற்பியிடம் பேரம் பேசி முன்னூறு ரூபாவுக்கு மீனைவிற்றார். " ரெண்டு நாளையில் பொழுதை தளப்படியில்லாமல் போக்காட்டலாம்'' என்று நினைத்தவர் கறிப்பாட்டுக்கென்று ஒரு கருங்கண்ணிப் பாரையைக்கையில் தூக்கினார்.


வீட்டுக்கு அருகே சென்றதும் அன்னம்மாக்கிழவி யாருடனோ பேசிக்கொண்டிருப்பது கேட்டது. யாராய் இருக்கும் என்று ஊகிக்க முடியாத நிலையில் வீட்டில் புகுந்த போதுதான் மகிழ்ச்சியுடன் கூடிய அதிர்ச்சி காத்திருந்தது. பத்து வருஷத்துக்கு முன் வீட்டை விட்டுப் போன பேரன் இராயப்பு தான் தென்பட்டான்.

என்னமாய் வளந்திருக்கிறான்! அவனைக் கட்டித்தழுவி உச்சி மோந்து ஆனந்தக்கண்ணீர் வடித்தார் அவர். அவன் தேகம் முழுவதும் வீரத்தழும்புகள் புடைத்துப் பளபளத்தன.

அன்னம்மாக்கிழவி அவசரம்அவசரமாக மீனை வெட்டிக் கழுவி நாலு பகுதியாகப் பிரித்து பொரிக்கத் தொடங்கினாள். குழம்பு, வெள்ளைக்கறி, சொதி எல்லாம் மீன்தான்.

''. நீ கதைச்சுக்கொண்டிரு பாக்கு வெட்டிற நேரத்துக்கிடையில உதிலையொருக்கால் போட்டு வாறன்'' எனப்புறப்பட்டார்.

"பாவம் மனிசன் வயது போன நேரத்திலையும் இப்படிக் கடல் அடிபட்டுப் பனியால் நனைஞ்சு வெயிலால் வதங்கி கஸ்ரப்பட வேண்டியிருக்குது. அலுப்புத் தீர்க்கத் தான் போகிறார்.'' என்பதை உணர்ந்து கொண்ட கிழவி பொரியல் சரையை நீட்டினாள்.



செபமாலையர் சிமியானின் கள்ளுக்கொட்டில் நோக்கி விரைந்தார். பேரனைப்பற்றிய சிந்தனையை அவர் மனதில் இருந்து துடைத்தெறிய முடியவில்லை.

இராயப்பு படிப்பில் படு சுட்டியாக இருந்தான். பஞ்சடைந்த சிக்கன விளக்கில் படித்தும் ஜீ.சீ.ஈ ஓ.எல் பரீட்சையில் ஆறு திறமைச் சித்தியுடன் தேறிவிட்டான். உயர்தர வகுப்பில் படிக்கும் போதுதான் அவன் தந்தை ஷெல்லுக்கு இரையானான். அந்த நிகழ்ச்சி அவன் இதயக்கூட்டில் மாறாத ரணமாகி குருதி சிந்தியது. அவன் தந்தை மட்டுமா? எத்தனை உழைப்பாளிகள் கொடிய இராணுவத்தின் அகோரப்பசிக்குப் பலியானார்கள். எத்தனை இளைஞர்கள் குஞ்சு குருமன்கள் கொடிய யுத்தத்தினால் பாதிக்கப்பட்டார்கள்.

கொக்கிளாயில் இருந்து பேப்பாரப்பிட்டி வரை 40 மைல் நீளக்கடற்பரப்பில் இரவு பகல் பார்க்காமல் அலையைக்கிழித்து படகை வலித்து சீவனம் நடத்தினார்கள். இன்று எல்லாம் பொய்யாய் பழங்கதையாய் போன சங்கதிகள். இந்த மண்ணும் பரந்து விரிந்த வங்கக்கடலும் எங்களுக்குச் சொந்தம் இல்லையா? இவற்றுக்கு உரிமை கொண்டாட யார் அனுமதி கொடுத்தார்கள்?

சுற்றி வளைப்பு, தேடுதல் வேட்டை, காணாமல் போதல் எல்லாம் அன்றாட வாழ்க்கையாகி விட்டனவே.

பேரனின் நடத்தையை உன்னிப்பாக கவனித்த செபமாலையர் ஒரு முடிவுக்கு வந்தார்.

இதுக்கு ஒரேயொரு மருந்து அவனை வெளிநாடு அனுப்புவதுதான். " காணி பூமியை வித்து தாலியை வாளியை அடைவுவைச்சு ஆறாவட்டிக் கென்றாலும் காசு பிரட்டி பேரனை வெளிநாட்டுக்கு அனுப்பிப் போடோணும்.''

கள்ளுக்கொட்டில் ஆரவாரம் அவரது சிந்தனைக்கு முற்றுப் புள்ளி வைத்தது. ''சும்மா சொல்லக்கூடாது: சிமியானின் கள்ளின்ர உரிசை அலாதியானதுதான்.''

புதுப்பிளாவில் பக்குவமாக நுரைக்கநுரைக்க ஏந்திய கள்ளை வாயால் ஊதி கள்ளின் மனத்தை மூக்கால் நுகர்த்தி ஒரு மிடறு உள்ளே தள்ளிய பின் பூவரச மர நிழலைச் சரணடைந்தார். கூட்டிக் குவித்த மணலின் மேல் கள்ளுப் பிளாவைக் குந்த வைத்துவிட்டுப் பொலித்தீன் சரையிலிருந்து தாவடிப் புகையிலை எடுத்து இரண்டு மூன்று நெட்டி வகிர்ந்து அழகாகச் சுருட்டிக் கொண்டார். சுருட்டின் நுனியைக் கடித்துத் துப்பியபோது தான் சூசை,

**முல்லைமணி**

சவிரி, விக்டர், தம்பர், காத்தார் என்னும் சக தொழிலாளர் மரத் தடிக்கு வந்தனர்.

இன்னொரு மிடறை விழுங்கிச் சுவைத்தபின்பு பொரியல் சரையைப் பிரித்து முள் நீக்கி கடித்துத் தின்றார். கள்ளுக்கும் பொரியலுக்கும் இணைந்த பொருத்தத்தை வியந்து கொண்டே சுருட்டைக் கவ்விப் பற்றவைத்துப் புகை இன்பத்தில் திளைத்தார்.

பழைய நினைவுகள் மீண்டும் வீடியோக்காட்டின. அவரது வெளிநாடனுப்பும் திட்டம் நிறைவேற்றப்படுமுன் இராயப்பு காணாமல் போய் விட்டான். செபமாலையர் ஒரேயடியாய் இடிந்து போனார். அன்னம்மா கிழவியின் ஒப்பாரி ஓய்ந்தபாடில்லை. அடுத்த வீட்டுப் பெண்டுகள் விடுப்புப் பார்க்கக் கூடிவிட்டனர்.

''.....இந்த மண்ணிலே சாதிக்க வேண்டியவை நிறைய உண்டு அதுக்காகப் போகிறேன். என்னைத் தேடவேண்டாம்'' - இராயப்பு எழுதிவைத்துச் சென்ற கடிதம் கண்ணில் பட்டது.

ஆறுதல் பெருமூச்சு விட்டார். செபமாலையர். ஆமியிடம் அகப்படவில்லை என்ற மட்டில் நிம்மதி.

பேரனின் நினைப்பு வரவே வீடு நோக்கிச் சென்றார். வீட்டில் நான்கைந்து இளவட்டங்கள் கதைப்பது கேட்டது. ஆனையிறவு, ஆர்.பி.ஜி. சுற்றிவளைப்பு என்னும் சொற்களைத் தான் அவரால் கிரகிக்க முடிந்தது.

உள்ளே சென்றார் இராயப்பு நண்பர்களை அறிமுகப்படுத்தினான். ''சீலன், பாண்டியன், தினேஷ் ,மயூரன்- இவர்கள் எனது சகபோராளிகள்''

"என்ன பிள்ளையள் ஆனையிறவைப்பற்றிக் கதைக்கிறியள். உள்ளடுற யோசினையோ?''

சிறிது நேர மௌனத்துக்குப்பின் ஒருவரை யொருவர் பார்த்து முழிசி விட்டுச் சீலன் சொன்னான்.

அப்படியொண்டும் இல்லையப்பு''ஆனையிறவிலை; பாண்டியனைச் சந்திச்சதைப் பற்றிக் கதைச்சனாங்கள்''

" ஆனையிறவுக்கு இருநூற்றி நாப்பது வரியச் சரித்திரம் இருக்கு. முதலிலை உலாந்தாக்காறன் ரெண்டு கோட்டை கட்டினானாமே ஏன் தெரியுமே?''

"தெரியாது''

''வன்னியர் படையெடுப்புக்குப் பயந்துதான்!''

செபமாலையர் தொடர்ந்தார் இங்கிலிஸ் காறரும் இதுக்காத்தான் அந்தக் கோட்டையளை வச்சிருந்தினம். இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு அதில் சுங்கத்திணைக்களம் இருந்தது. பிறகு படையளைக் கொண்டந்து முகாமாக்கிச்சினம் இப்படிப் படிப்படியா வளர்ந்து இப்பபென்னம் பெரிய முகாமாய்ப் போச்சு''

"அப்புவுக்கும் சரித்திரம் தெரியும்'' தினேஷ் பாராட்டினான்.

''நேரம் போகுது நாங்கள் போட்டுவாறம் அப்பு''

இராயப்புவைக் கெஞ்சி மன்றாடியாவது தடுக்கத்தான் கிழவர் எண்ணினார். ஆனால் இதை வற்புறுத்திக்கூற அவரால் முடியவில்லை.

"ஒரு காரணமும் இல்லாமல் எத்தினை இளசுகள் சித்திரவதை செய்யப்படுதுகள்? எத்தனை பெண்டுகள் புருஷன்மாரைப் பறிகொடுத்திட்டுதுகள்? படுபாவிகள் குஞ்சு குருமனையும் விட்டு வைச்சாங்களா இப்படி இருக்க நாங்கள் எங்கடை பிள்ளையளை பொத்திப் பொத்தி வைச்சுக்கொண்டு ஊராற்றை பிள்ளைகள் சண்டைபிடிச்சு மண்ணை மீட்கட்டும் எண்டு நினைக்கிறது சுயநலம்'' என்று தான் செபமாலையர் எண்ணினார்.

ஏதோ ஒரு பெரிய தாக்குதல் நடக்கப்போகின்றது என்பது மட்டும் அவர் உள்ளுணர்வு உணர்த்தியது. அது ஆனையிறவாகவும் இருக்கலாம் தானே.

ஆனையிறவு முகாம் இராணுவத்துக்குச் சாதகமான புவியியல் சூழலில் இருந்தது. வெட்டை வெளியிலே மரங்களோ புதர்களோ இல்லாத இடம். புலிகள் காப்பரண்களையோ பதுங்கு குழிகளையோ அமைப்பது சாத்தியமில்லை. தொண்ணூற்றொண்டில் புலிகள் முகாம் மீது பாரிய தாக்குதலை மேற்கொண்டும் கைப்பற்ற முடியவில்லை. பாரிய உயிரிழப்புக்களை எதிர்நோக்கியதும் தாக்குதலைக் கைவிட்டார்கள்.

இராயப்பு, சீலன், பாண்டியன் முதலானோர் வெறுமனே போராளிகள் அன்று பல முனைகளைக் கண்டவர்கள் மேலிடத்தின் போர்த் திட்டங்களை ஓரளவு ஊகித்திருந்தனர்.

''எதிரிகள் எம்மைவிடப் பலமடங்கு பலமுடையவர்கள் என்றாலும் ஏதோ ஒரு பலவீனம் அவர்களிடம் இருக்கத்தான் செய்யும். அதைக் கண்டறிந்து செயலாற்றுவதில் தான் எமது வெற்றி தங்கியிருக்கிது.'' எனத் தேசியத் தலைவர் ஒரு முறை குறிப்பிட்டதை இராயப்பு நினைவு கூர்ந்தான்.

ஆனையிறவு பதினையாயிரம் படையினர் கொண்ட இரண்டு டிவிசன்கள் உடையது. பரந்தன் தொடக்கம் இயக்கச்சி ஈறாக எழுபது கிலோமீற்றர் நீளமான இராணுவ வேலிகளையும் இருநூற்று ஐம்பத்தொன்பது சதுர கிலோமீற்றர் பரப்பளவையும் கொண்ட பெருந்தளமாக வியாபித்திருக்கிறது.

விடுதலைப்புலிகள் ஆனையிறவு முகாமைத் தம்மண்ணிலுள்ள மிகப் பெரிய அவமானச்சின்னமாகவே கருதினர்.

அதனை எப்படித் தாக்கி அழிப்பது? சாதாரண போராளிகளுக்கு என்ன தெரியும்?

பரந்தனைத் தாக்குமாறு புலிகளின் மேலிடம் உத்தரவிட்டது. இத்தாக்குதலுக்கு இராயப்புவே தலைமையேற்றான். அகோரமான பீரங்கித் தாக்குதல் மோட்டார் ஷெல்கள், துப்பாக்கி ரவைகள் ஒரே நேரத்தில் பிரயோகிக்கப்பட்டன. இராணுவத்தின் எதிர்த்தாக்குதலில் நான்கைந்து போராளிகள் சாவைத் தழுவினர்: பத்தோ பதினைந்தோ படுகாயம் இராணுவத்தரப்பில் பலத்த உயிர்ச்சேதம். எஞ்சியோர் பின்வாங்கி ஓடத்தலைப்பட்டனர்.

இயக்கச்சி முகாமைச் சந்திக்கு வடக்கிலும் தெற்கிலும் ஊடுருவித் தாக்குமாறு ஆணைபிறப்பிக்கப்பட்டது.

வடக்குப் படையணிக்குச் சீலனும் தெற்கில் இராயப்புவும் தலைமை தாங்கினர். இதே நேரத்தில் கிட்டுப் பீரங்கிப் படையணி ஆனையிறவுப் பிரதான தளத்தின் மீது அகோரமான தாக்குதலை மேற்கொண்டது. ஆயுதக்களஞ்சியங்கள், எரிபொருட்குதங்கள், உணவுக் களஞ்சியங்கள் அனைத்தும் தீப்பற்றி எரிந்தன. ஆயிரக் கணக்கான இராணுவத்தினர் உயிரை இழந்தும் படுகாயமுற்றும் விட்டனர்.

கடல் நீரேரியூடாக வந்த கடற்புலிகளின் படகுப்படையணி கரையோரக் காவல் நிலை மீது தாக்குதல் நடத்தியது. உயிரிழந்த படையினரின் சடலங்கள் கடல் ஏரியில் மிதந்தன.

இயக்கச்சி புலிகளின் கிடுக்கிப்பிடியில் சிக்கியது. இறுதியில் இயக்கச்சிப் படைத்தளம் முழுமையாகக் கைப்பற்றப்பட்டது.

ஆனையிறவில் குடிநீர் வசதி இல்லை. இதுவரை பரந்தனில் இருந்தும் இயக்கச்சியில் இருந்தும் தான் படையினர் குடிநீர் பெற்றனர்.

இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்குமான தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன.

படைத்துறைக் கட்டளைப்பீடத்தினால் அசைக்க ☞

☞ நீயே செய்யக்கூடியதற்காக இன்னொருவரைத்தொந்தரவு செய்யாதே. - தாமஸ் ஜெஃப்பர்ஸன்

முடியாது எனக் கருதப்பட்ட இயக்கச்சிப் படைத்தளத்தை வீழ்த்திய பின்னர் இராணுவத்திற்கான குடிநீர் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

இராணுவத்தின் பலவீனத்தை இப்பொழுதுதான் இராயப்பு உணர்ந்து கொண்டான்.

''புலிகளின் முற்றுகையில் ஆனையிறவு; படையினர் தப்பியோட முயற்சி''

செபமாலைக் கிழவருக்கு களமுனைச் செய்திகள் உற்சாகமளித்தன. என்றாலும் பேரனுக்கு என்ன நடக்குமோ என்ற அச்சம் மனத்தைக் குடையத்தான் செய்தது.

முப்பத்தாறு மணிநேரம் படையினருக்கு குடிநீர் கிடைக்காததாலும் கடுமையான வெப்பத்தாலும் போரிடும்ஆற்றலை அவர்கள் இழந்திருந்தனர். இதனால் பலர் இறக்க நேரிட்டது.

இராணுவத்தினர் எப்படியும் உயிர்தப்பினால் போதும் எனக் களத்தைவிட்டே ஓடத்தொடங்கினர். இதனை அறிந்து கொண்ட புலிகளின் மேலிடம் அவர்களுக்கு வசதியாக ஓடுவதற்கு ஒரு சிறிய பாதையை விடுமாறு கட்டளை பிறப்பித்தது.

ஆனையிறவு இயக்கச்சித் தளங்கள் புலிகளின் முற்றுகையில் சிக்கிக் கொண்டிருந்த நிலைமையைப் படைத்துறைத் தலைமை அரச உயர்மட்டத்திற்குத் தெரியப்படுத்தியது.

சனாதிபதி நாட்டில் இல்லாத நிலையில் பிரதமர் தலைமையில் கூட்டம் கூட்டப்பட்டு அவசர முடிவுகள் எடுக்கப்பட்டன. தளபதிகள் மாற்றப்பட்டனர். தலையிடிக்குத் தலையணையை மாற்றியது போலத்தான்!

அசைக்க முடியாத புலிகளின் வியூகத்தை உடைக்க முடியாது என உணர்ந்த இராணுவ மேலிடம் படைகளைப் பின்வாங்குமாறு உத்தரவிட்டது.

வடக்கிலிருந்து வந்த வாகனங்கள் புலிகளால் களத்தினுள்ளே அனுமதிக்கப்பட்டன. இந்த வாகனங்களில் இராணுவத்தினர் தப்பிச் சென்றுகொண்டிருந்தனர்.

பிரதிக்கட்டளை அதிகாரி சென்ற வாகனத்தை இலக்கு வைத்து மயூரன் படையணியினர் தாக்குதலை மேற்கொண்டனர். சினைப்பர் தாக்குதலில் அதிகாரி கொல்லப்பட்டார்.

மேலிடத்தின் கட்டளைப்படி தளத்திலிருந்த ஐந்து ஆட்லறிகளையும் அதிபார டிறக் வண்டியில் படையினர் கட்டி இழுக்கத் தொடங்கினர்.

இராயப்புவும் சகபோராளிகளும் இதனை மேலிடத்துக்கு அறிவித்தனர். தாக்குதல் நடத்துமாறு மேலிடத்து உத்தரவு வந்தது.

உடனடியாக விக்டர் எதிர்ப்பு கவசப்படையணி தாக்குதலைத் தொடர்ந்தது. களமுனையின் பல திக்கிலிருந்து பீரங்கி, ஆர்.பி.ஜி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டன. துப்பாக்கி ரவைகள் சீறிப்பாய்ந்தன.

''ஆனையிறவில் ஐந்து ஆட்லறிகள் புலிகளால் கைப்பற்றப்பட்டன''

பத்திரிகைத் தலையங்கம் செபமாலைக் கிழவருக்கு உற்சாக மூட்டியது.

இந்த ஆட்லறிப் பீரங்கிதானே வங்கக்கடலிலிருந்து எம்மவர் உயிரைக் குடித்தன என்று நினைத்தார் அவர்.


அரை குறை உயிருடன் முனகிக்கொண்டிருந்த படை வீரர்களையும் கவனியாது இராணுவத்தினர் ஓடித்தப்பினர்.

படுகாயமடைந்த இரண்டு மூன்று படையினர் தண்ணி, தண்ணி என்று கத்தினர். இராயப்பு என்ன நினைத்தானோ தன்னிடமிருந்த குடிநீரை அவர்களுக்குப் பருக்கினான். அவர்கள் கையெடுத்துக் கும்பிட்டுவிட்டு உயிர் நீத்தனர்.

வெட்டை வெளியில் கைப்பற்றிய பீரங்கிகளை எப்படிக்காப்பாற்றுவது என்பது பெரிய பிரச்சினை. ஹெலிகள் பீரங்கிகள் எப்படியும் அழித்துவிட வேண்டும் என்று கங்கணம் கட்டின. ஒவ்வொன்றும் எட்டுத்தொன் நிறையுடைய ஆட்லறிகளை மனித வலுவால் இழுத்துச் செல்ல முடியாது ஹெலிகள் தாளப்பறக்க முடியாதபடி புலிகளின் விமான எதிர்ப்புப் படையணி குண்டுகளையும் ஷெல்களையும் வானத்தில் ஏவின. அவைவானத்தில் வெடித்துச் சிதறி ஒரு முற்றுகை வலையத்தை அமைத்தன.

அவசரமாகக் களமுனைக்குக் கொண்டுவரப்பட்ட புல்டோசர்கள் ஆட்லறிகளை இழுத்துச் சென்றன.

ஹெலித்தாக்குதலால் சீலனும், விக்டரும் சாவைத் தழுவிக் கொண்டனர். காலில் ஏற்பட்ட காயத்துடன் இராயப்பு நொண்டி நொண்டி நடந்தான் நினைத்ததைச் சாதித்த மகிழ்ச்சிப் பிரவாகம் அவன் வதனத்தில் பளிச்சிட்டது.



# காளைகள் பொறுமையிழந்தால்

பருந்துகள் இன்னமும்
எம் வானில் பறந்தபடிதானுள்ளன
பதிவதும் நிமிர்வதுமாய்
இடைக்கிடை இரை கொத்துவதுமாய்
இன்னமும் எங்கள் வானத்தில்

அலகைகளுக்கு முடிச்சுப்
போட்டதாகச் சொன்னார்கள்
யூதரெனும் நினைப்பவர்க்கு
எங்கள் குஞ்சுகளை
சிலுவையிலறைந்திடத் துடிக்கிறது

முன்பும் இப்படித்தான்
கொட்டினார்கள் குனிந்தோம்
வெட்டினார்கள் வீழ்ந்தோம்
தீயிட்டார்கள் பொசுங்கினோம்.

எங்கள் தாய்ப்பறவை சினந்தது
கொட்டினார்கள் அலகை முறித்தோம்
வெட்ட நினைத்தனர் விரட்டினோம்
தீவைத்தார் பீனிக்ஸ் ஆனோம்
கடலைப் பிளந்து
அங்கொரு பாதை செய்தோம்
ஒளியின் வழிகாட்டலில்
எங்களுக்கான வெற்றித்தேசம்
அந்தா என்றான போதுதான்
ஒலிவக் கிளைகளை
அலகில் தாங்கி வந்தார்கள்
வில்லால் வளையாததை
சொல்லால் வெல்லலாமென்றார்.

இன்றென்ன விந்தையெனில்
எங்கள் வானத்தில் சிறகு விரிக்கவும்
சிறிது தூரம்தான் அனுமதியென்கிறார்
கூடுகளின் முன்குந்தியிருந்து
குனிந்தபடி எம்மைக்கடக்குமாறு
கட்டளையிடுகின்றன பருந்துகள்.

எங்கள் கைகளும் வெறுமை
வேடர்க்கு இதனால் குஷி
அழுந்தி அமுங்கி
கழுத்தை காலுடன் பிணைத்தநிலையில்
தெத்தி தெத்திப் போகின்றன
காளைகள் என்று நினைப்பவர்க்கு

எங்கள் ஆதி முதல்வனுக்கு
அமைதியில் தீராத காதலென்பதால்
தாய்ப்பறவை பொறுமை காக்கிறது.

பொறுமைக் குளத்தில்
தொடர்ந்தும் கல்லெறியப்படுமானால்
சிட்டுக் குருவிகளன்று காளையெனமாறும்
கட்டுகள் பொடிபடும்
கொம்புகள் மணலைக் கிழிக்கும்
அவர் குழம்புகளில்
பருந்துகள் பாழ்படும்

அலகை தாங்கிகளே
அமைதிப் பூங்காவில் தீயிடாதீர்.
தாய்ப்பறவையை சோதனைக்குள்ளாக்காதீர்
பொறுமையிழந்தால் நீர் சாம்பல் தான்.

அ.பி.குணா

# நூல்நோக்கு

**நூல்** தேசத்தின் பாடல்கள் (சிறுகதைகள்)
**எழுதியவர்:** வளவைவள்ளவன்
**நீதிவளவன் வெளியீடு,** **விலை:150**

**நூலின்** பெயரைப் பார்த்ததும் புதிய ஒலிப் பேழை ஒன்றின் நூல் வடிவம் என்றே எண்ணத் தோன்றுகிறது. உள்ளே நுழையும் போது தான் ஆசிரியர் வளவை வளவன் எம் தேசத்தின் கடந்த கால அவலங்களையும், அற்பணிப்புக்களையும் கூடவே, மூடநம்பிக்கைகளையும், தேவையானவற்றை தட்டிக் கொடுத்தும், தேவையற்றவற்றை தட்டிக் கேட்டும் தெளிவுபடுத்தி எமது சமுதாயத்தின் ஏற்ற இறக் கங்களை இனிவரும் இளைய தலைமுறைக்கு இனிதாக வழங்கும் சிறுகதைகள் மூலம் எடுத்துச் சொல்ல முற்பட்டிருக்கிறார் என்பது வெளிப்படுகின்றது.

"ஒரு அரசின் சரிவு." என்ற படைப் போடு ஆரம்பிக்கும் இந்நூல் குறிப்பிட்ட படைப்பில் எமது சமுதாயத்தில் பொறுப்பான பணிகளில் பொறுப்பான பதவி வகிக்கும் விதானையார், ஆசிரியர்களின், பொறுப்பற்ற செயற்பாடுகளால் சமூகத்தில் உள்ள வறியவர்கள் அடையும் மன உழைச்சல்களை சிறப்பாக எடுத்துக் கூறி இறுதியில் அவர்களை இந்த நிலைக்குத் தள்ளினால் அதனால் சம்பந்தப்பட்டோர் அடையும் பாதிப்புக்களையும் எடுத்துக் கூறியிருக்கிறார்.

அடுத்த படைப்பு 'அரங்கேற்றம்' எனும் தலைப்பில் அதிகாரத்தில் அமரமுன் சந்திரிகா அம்மையாரின் போலி முகத்தையும் அதன் பின்னான அவரின் நிஜவடிவத்தினையும் அடக்குமுறைப் போக்கையும், இந்நூலில் வேறெங்கும் காணப்படாத ஒரு வித்தியாசமான கதைப் பாங்கில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

அடுத்து "உணர்வுகள்" எனும் படைப்பு. இது எமது போராட்டத்தில் வர்க்க வேறுபாடின்றி எல்லா மக்களும் ஒன்று



திரண்டு எமது தேசத்தின் விடுதலைக்காகப் போராடினார்கள் என்ற க்னதியானதொரு செய்தியினை வரலாற்றுப் பதிவாக்கியுள்ளார். 'மானுடம் இன்னும் சாகவில்லை' என்ற சிறுகதை நட்பின் பெருமை யையும் உற்ற உறவுகளின் சந்தர் ப்பவாதத்தையும் கூடவே விழியிழந்த ஒரு பெண்ணின் ஒளிமயமான உள்ளத்தையும் தொட்டுக் காட்டுவதாய் உள்ளது.

இன்நூலின் பெயரான "தேசத்தின் பாடல்" என்னும் தலைப்பில் அமைந்துள்ள சிறுகதை எதிரியின் ஈவிரக்கமற்ற நடவடிக்கைகளால் ஒரே சமயத்திலும் அடுத்தடுத்தும் தமது உறவுகளை இழந்தவர்களின் வேதனையை மையமாக வைத்து புனையப்பட்டுள்ளது. 'அழுவதற்கா பிறந்தோம்....? கண்ணீரில் நனைவதற்கா வளர்ந்தோம்...?' என்ற வரிகளிற்கான பதிலை வாசகர்களிடமே விட்டுள்ளமை கதையின் சிறப்பம்சமாக உள்ளது.


எமது விடுதலைப் போராட்டம் வீரியம் பெற முன்னர் இம் மண்ணில் காணப்பட்ட சாதீய அடக்குமுறைப் போக்குகளை மையமாகக் கொண்ட சில படைப்புக்களும் எமது விடுதலைப் போராட்டம் ஒரு வலுவான நிலையை எட்டிய பின்னர் எமது மண்ணில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றங்களையும் பேரினவாத அரசின் முரட்டுத்தனமான போக்கால் எமது மக்கள் அடைந்த துன்பங்களையும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக இத்துன் பங்களிற்கு மத்தியிலும் அவர்கள் எமது மண்ணை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுப்பதில் கொண்டிருந்த தளராத உளஉறுதியையும் வரலாற்றுச் சான்றுகளாக்கியுள்ளது.

வாக்கு மூலங்கள், ஈகையில் மறுபக்கம், தேசத்தின் கொடி, எம் மண்ணோடு பின்னிப் பிணையாதவர்களுக்கு சாத்தியமா என்று கேள்வி பிறக்கலாம். ஆழமறிந்தவர்களுக்கு அவை ஆதார ஆவணங்கள் என்பது புலப்பாடு.

எமது கடந்த காலங்களை, எதிர்கால வரலாறாக்கியிருக்கும், வரலாறாக்க இருக்கும் திரு. வளவைவளவன் அவர்கள் வருங் காலத்தில் தனது படைப்புக்களை வரலாற்றுப் பதிவுகளை ஒரு சிறப்பான நிலைக்கு உயர்த்திவிடத் தன்னாலான பங்களிப்பினை ஆற்றுவார் என்பது தெளிவு.

குணாளன்.

# ஒவ்வொரு அஸ்தமனத்திலும்



சூரிய அஸ்தமனத்தில் தான் சந்திர உதயம்
மலர்களின் அஸ்தமனத்தில் தான்
காய்களின் உதயம்
விதைகளின் அஸ்தமனத்தில்தான்
மரங்களின் உதயம்
சில மனிதர்களின் அஸ்தமனத்தில்தான்
பெருமைகளதும் சாதனைகளதும்உதயம்
முயற்சிகளின் அஸ்தமனத்தில் தான்
திருவினையாக்கலின் உதயம்
கொடுமைகளின் அஸ்தமனத்தில் தான்
நிம்மதிகளின் உதயம்
போரின் அஸ்தமனத்தில் தான்
சமாதானம் உதயம்
ஒவ்வொரு அஸ்தமனங்களும்
உதயங்களுக்காகவே.

இரா. காயத்ரீ

தன் தேவைகளை தானே நிறைவு செய்யக்கற்றுக்கொள்வதே, உலகில் தலையாயது. - மிஷேல் தெமோன்த்தேன்




## முக்தன்

அன்று பயங்கர மழை பெய்து கொண்டிருந்தது. பத்து நாட்களுக்கும் மேலாக தொடர்ந்து கொட்டி விட்டு ஒரு வழியாக ஓய்ந்தது. அந்த மழைக்கு மயூரனின் கிராமமும் தாக்குப்பிடிக்கவில்லை. பாதி அளவு வெள்ளம் சூழ்ந்து விட்டது. போதாக்குறைக்கு அந்தக் கிராமத்திலேயே மிகப் பெரிய ஏரியாக இருந்த "பச்சைபுல் மோட்டை"யும் வெள்ளத்தால் பெருக்கெடுத்து அந்த வெள்ளம் அவனது கிராமத்தையும் சூழ்ந்து கொள்ள அதற்கு மேலும் அங்கு இருந்தால் அனைவரும் செத்து விடுவோம், என எண்ணிய கிராமமக்கள் தங்கள் உடைமைகளை வாரிச்சுருட்டி எடுத்துக்கொண்டு வேறு ஊருக்குச் செல்லத் தொடங்கினர். ஆனால் அந்த கிராமத்திலேயே வசித்து வந்த "மயூரன்" என்ற இளைஞன் மட்டும் வேறு ஊருக்குச் செல்ல முற்படவில்லை. அவனது உயிர் நண்பனான ராஜ் என்பவனும் கேட்டுப் பார்த்தான். "நான் வரவில்லை இந்த வெள்ளத்திலிருந்து இறைவன் என்னைக்காப் பாற்றுவான் நீபோ" என்று கூறினான். நண்பனைப் பிரியும் சோகத்துடன் ராஜ் அவ்விடத்தை விட்டு அகன்றான். மயூரன் தன் வீட்டின் கூரை மேல் ஏறி அமர்ந்து கொண்டான்.

அப்போது கிராம மக்களை ஏற்றிச் சென்ற ஒரு படகு ஓட்டி மயூரன் அருகே வந்து "வா தம்பி" ஏறிக் கொள் என்றார். "நான் வரவில்லை! நீங்கள் செல்லுங்கள் இறைவன் என்னைக் காப்பாற்று வான்." என்று சொல்லி படகில் ஏற மறுத்தான், படகு சென்று விட்டது. மயூரன் இறைவனைப் பிரார்த் தித்துக் கொண்டே இருந்தான். ஆனால் நீர் மட்டம் உயர்ந்து கொண்டே இருந்தது. சில மணி நேரங்களில் அவனது குடிசை வெள்ளத்தில் மூழ்க, எப்படித் தப்புவது என்று திக்கு முக்காடிப்போன மயூரன் குடிசையை ஒட்டியிருந்த மரத்தின் கிளையைப் பிடித்து மரத்தின் மீது ஏறிக் கொண்டான். நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்தது. மயூரன் அமர்ந்திருந்த கிளையைத் தொட்டது. அப்போது கிராமமக்களை ஏற்றிக்கொண்டு இன்னொரு படகு அந்தப்பக்கம், வந்தது. மரத்தின் கிளையில் மயூரனைப் பார்த்ததும் அவன் அருகே வந்து நின்றது. "தம்பி!வா! பச்சைப் புல்மோட்டையில் இருந்து தண்ணீர் வருகிறது. இன்னும் சிறிது நேரத்தில் இந்த மரமே மூடிவிடும்" என்றார் படகிலிருந்த ஒருவர் "அட சரி தான் போங்கப்பா! கடவுள் என்னைக் காப்பாற்றுவான். நான் எதற்கும் பயப்பட மாட்டேன்" என்றான். படகிலிருந்தவர்கள் அவனை விநோதமாகப் பார்த்து விட்டுச் சென்றனர். சில மணி நேரங்கள் கழிந்ததும் வெள்ளத்தில் மரத்தின் கிளை மூழ்கியது. மயூரன் அதற்கும் மனம் தளர்ந்து விடவில்லை. மரத்தின் உச்சிக் கிளையில்போய் அமர்ந்து கொண்டான். பின்பு தொடர்ந்து இறைவனை பிரார்த்திக்கத் தொடங்கினான். ஆனால் வெள்ளம் அந்த மரத்தையே மூழ்கடிக்கும் அளவிற்கு உயர்ந்து கொண்டிருந்தது. அன்று மாலையே மயூரன் இருந்த மரம் வெள்ளத்தில் மூழ்க நீச்சல் தெரியாத மயூரன் வெள்ளத்தில் மூழ்கினான். ஒரு சில நிமிடங்களில் மூச்சுத் திணறி அவன் இறந்தான். இறப்பிற்கு பின்பே இறைவனிடம் சென்றான். அவனுக்கு ஒரே கோபம் "என்ன இறைவா! உன் அதித பக்தனான என்னை இப்படி வஞ்சித்து விட்டாயே. இறைவன் இருக்கிறான் என்பதை உறுதிப்படுத்த நான் கடைசிவரை எவ்வளவு போராடினேன். ஆனால் இறைவன் இல்லை என்பதற்குச் சாதகமாக அல்லவா உனது செயல் அமைந்து விட்டது. என்னைக் காப்பாற்ற ஏன் நீ முயற்சி செய்யவே இல்லை என்று கேட்டான் மயூரன். அனைத்தையும் கேட்ட இறைவன் "பக்தனே! உனது அதீத பக்தியை நான் நன்கு அறிவேன். உன் முதல் பிரார்த்தனையின் போதே உன்னைக் காப்பாற்ற முதல் படகை அனுப்பி வைத்தேன். அது என் வேலைதான் என்பதை புரிந்து கொள்ளாத மூடனாக இருந்தாய். மேலும் நீ செய்த பிரார்த்தனையை செவிசாய்த்து மேலும் ஒரு படகை அனுப்பிவைத்தேன். அதையும் நீ புரிந்து கொள்ளவில்லை. அதனால் மற்றவர்கள் என்னைப்பற்றி தவறாக நினைப்பார்களே என்பதைக் கூட பொருட்படுத்தாமல் உனக்கு புத்தி புகட்டவே உனக்கு இறப்பைக் கொடுத்தேன். "மூடனுடைய முதுகுக்குபிரம்பு ஏற்றதென்று சொல் வார்கள் இறைவனுக்கு நன்றி செலுத்தத் தெரியாத நீ வாழ்வதை விட சாவதுதான் மேல்" என்றார் கடவுள். தலை கவிழ்ந்தான் மயூரன்.

**அ.ராஜ்குமார்.**

## வாரம் ஒரு குறள்



மனித குலத்தை உயர்த்தி சிறப்பிப்பது ஒழுக்கம் ஒன்றே. ஒருவர் ஒழுக்கத்தின் வழி ஒழுகி வாழ்வாராக இருந்தால் அவரை விட உலகில் உயர்ந்தவர் எவருமே இருக்க முடியாது.

அவ்வாறு நல்ல ஒழுக்கத்தின்பால் வாழ்தல் நன்மையாகவே அமைவதோடு, மற்றவர்களிடம் எம்மைப்பற்றிய அபிப்பிராயமே நிலவும்.

அவ்வாறல்லாது தீய ஒழுக்கத்தின் வழி தீய பழக்க வழக்கங்கள் வழியே செல்வோமாக இருந்தால் எமக்குத்துன்பமே பரிசாகக்கிடைக்கும். எம்மையாருமே மதிக்கமாட்டார்கள்.

நாம் அவ்வாறு ஒழுக்கத்தின் வழி வாழ வேண்டும் என்பதற்காகவே திருவள்ளுவர் "ஒழுக்கமுடைமை" என்ற அதிகாரத்தை அமைத்து அழகாக பின்வரும் குறளில் கூறியுள்ளார்.

**"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம்**
**- தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும்"**

## சிந்தனைக்கு

01) பிறருக்கு நீ செய்த உதவியை மறந்துவிடு பிறர் உனக்குச் செய்த உதவியை மறந்துவிடாதே.
02) வெற்றிகாண்பதற்கு நிச்சயமானவழி வெற்றி பெறுவேன் என்னும் தீர்மானத்துணிவாகும்.
03) ஒரு புத்தகம் முழுவதையும் வேகமாகப் படிப்பதை விட ஒரு பக்கத்தை நன்றாக உணர்ந்து கொள்வது மேலானது.
04) துன்பம் வரும்போது நண்பனைக் கைவிட்டு ஓடுபவர்கள் நல்லவர்களே அல்ல.

**வே.வினோதா**
**உடையார் கட்டு.ம.வி**

## குறுக்கெழுத்துப் போட்டி 19

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | | 05 | |
| | | | 10 | | |
| | 14 | | | | |
| | | | 22 | | 24 |
| | | 27 | | 29 | |
| 31 | | | | 35 | |

### இடமிருந்து வலம்
01. தாய்.
05. இல்லம்.
10. தலை.
14. கள்வன்.
29. இசைக்கருவிகளில் ஒன்று தலைகீழாக உள்ளது.
31. மாதங்களில் ஒன்று.
35. ஊழ் தலைகீழாக உள்ளது.

### மேலிருந்து கீழ்
01. வண்டி உருண்டோட இது தேவை.
02. அம்புலி தலைகீழாக உள்ளது.
03. கிழங்கு வகைகளில் ஒன்று குழம்பி உள்ளது.
05. கோழைக்கு எதிரானவன்.
22. பொதிசுமப்பது.
24. கிழமைகளில் ஒன்று இறுதி எழுத்தை இழந்துள்ளது
27. பேசும் பறவை

### குறுக்கெழுத்துப்போட்டி இல.17 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
01. ஆபரணம்.
07. காகம்.
11. பிதா.
15. மல்லிகை.
21. சாரதி.
28. நங்கூரம்
31. முரசு

**மேலிருந்து கீழ்**
01. ஆகாரம்.
02. பகல்.
09. சாமம்.
26. தங்கை

**குறுக்கெழுத்துப்போட்டி இல.17 இன் பரிசுக்குரியவர்**

**ப. பிரதிப்,**
**வ/விபுலானந்த கல்லூரி,**
**வவுனியா.**

**குறுக்கெழுத்துப்போட்டி இல.17 இன் பாராட்டுக்குரியவர்கள்.**

இ.செந்தீபன்,
சில்வா வீதி,
வட்டக்கச்சி.

ம.சுதா,
அரசினர் வைத்தியசாலை,
மல்லாவி, யோகபுரம்.

T.தர்மினி,
திருநகர், கிளிநொச்சி.

யூட்நிசான்,
தரம் -7A, ஜெயந்திநகர்.

இளையவர்களே! ☞ மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.


குறுக்கெழுத்துப்போட்டி இல.19
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.

## பொது அறிவு

01. இலங்கையில் சர்வதேச வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்ட ஆண்டு?
 1931ஆண்டு
02. இலங்கை ஐக்கிய நாடுகள் சபையில் எப்போது அங்கம் பெற்றது?
 1955.12.14இல்
03. இலங்கைக்கு ஒல்லாந்தர் வந்த ஆண்டு?
 1602ஆம் ஆண்டு
04. இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயங்கள் அமைக்கப்பட்டுள்ள இடங்கள் எவை?
 கட்டுநாயக்கா,பியகம,பொங்கன.
05. இலங்கையில் முதல் முதல் சேர்பட்டம் பெற்றவர்யார்?
 ஆனந்த குமாரசாமி.
06. இலங்கையில் முதல் முதலாக குளங்களைக் கட்டுவித்தவர் யார்?
 வசபன்.
07. இலங்கையில் முதலாவதாக பரிசோதனைக் குளாய் மூலம் குழந்தை எப்போது பிறந்தது?
 1999.11.10

ஞா.த.தமிழின்பன்.

## கிளியே நீ என் தோழி



வண்ணம் கொண்ட
பச்சைக் கிளியே
கண்ணை ஏன்
பறிக்கின்றாயோ?

உன்னைப் போல
பச்சை கொள்ள
எனக்கு நிறைய
ஆசைகள் உண்டு.

உன்னைப் போல
சிவந்த சொண்டு
எனக்கும் இருக்க
ஆசைகள் உண்டு.

உன்னைப் போல
சிறகு விரிக்க
எனக்கும் நிறைய
ஆசைகள் உண்டு.

உன்னைப் போல
உயரப் பறக்க
எனக்கும் நிறைய
ஆசைகள் உண்டு.

தென்னங்கீற்றின் சலசலப்பில்
உன்னுடன் இருந்து பேசி
காற்றுக் குளிக்க
எனக்கும் நிறைய ஆசையுண்டு.

சோலையில் வந்து
உன்னுடன் பேச
எனக்கும் நிறைய
ஆசைகள் உண்டு


உன்னுடன் இருந்து
மொழிகள் கற்க
எனக்கும் நிறைய
ஆசைகள் உண்டு

காலையில் எழுந்து
உன்னிடம் வந்து
மாலையில் திரும்ப
ஆசைகள் உண்டு

சோலையில் சுற்ற
நான் வருவேன்
எதிர்பார்த்து காத்திரு
கிளித் தோழியே நீ.

இந்துஜா - ந
கிளி.பிரமந்தனாறு ம.வி

## நகைச்சுவை



**01. ஒருவர்:-**
என்னடா விக்டர் எந்த நேரமும்கொம்பியூட்டர் முன்னாலையே இருக்கிறான்.
**மற்றவர்:-**
ஓம் ஓம், அது ஏன் என்றால் வெப்சைட் ஓப்பின் பண்ணி தன் கல்யாணத்திற்கு இளவரசியைத் தேடுறார்.

**02. உத்தியோகத்தர் :-**
எங்களுடைய அலுவலகத்தில் எல்லாவற்றுக்கும் கொம்பியூட்டர் வந்திட்டுது.
**மற்றவர்:-**
உண்மையாகவா...?
**உத்தியோகத்தர்:-**
ஆமாம், எங்கள் அலுவலகத்தில் பின்னேரம் ஐந்து மணி எண்டா எங்களை நித்திரையால எழுப்பிறது கூட கொம்பியூட்டர்தான் என்றால் பாரன்.


**அ.சீலன்**

# குதூகலம்


## திருமதியும் கணபதியும்



டாக்டருக்கு புழுதிபட்டது தெரியக்கூடாது




எனக்குச் சரியான மூச்சுத்திணறலாய் இருக்குது. டொக்டரிட்ட போகவேண்டும்.



எனக்கு ஒரே இருமலும் மூச்சுத்திணறலுமாய் இருக்கு டொக்டர்.

உம்மட நுரையீரல் தூசு மண்டலமாய் இருக்குது.



கடவுளே புழுதியால நான் சாகக்கூடாது.



தூசு படாமல் இருக்க நான் என்ன செய்ய?

பரந்தன் முல்லைத்தீவு வீதியில பயணத்தை நிறுத்தும்.

ஆசிரியர் : என்னப்பா.... பாடசாலையிலை கெட்டிக்காரனாக இருந்த நீ இப்படி பெருங்குடிகாரனாகி விட்டாயே...

பழையமாணவர் : எல்லாம் நீங்கள் படிப்பித்தபடி தான் நான் நடக்கிறேன் சேர்....

ஆசிரியர் : என்ன சொல்கிறாய்.... நான் படிப்பித்தபடி நடக்கிறாயா...?

பழையமாணவன் : ஓம் சேர்.. நீங்கதானே முந்தி எனக்கு 'ஊக்கமது கைவிடேல்' என்று திருபத்திரும்பச் சொல்லித் தந்தநீங்கள்....

நோயாளி டொக்டரிடம்:

'என்ன டொக்டர் உங்கடை மருத்துவ ஆலோசனை அறையிலை....' 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று பெரிய எழுத்திலை எழுதி வைத்திருக்கிறீங்கள்... நோயிருந்தாத் தான் உங்களுக்கு குறைவற்றுச் செல்வம் பெருகும்....!

டொக்டர் : .....!!...??

இவர் : நான் ஔவையார் சொற்படி நடக்கிற ஒருவன்...

அவர் : அதெப்படி?

இவர் : ஔவையார் தானே திரைகடலோடியும் திரவியம் தேடு என்று சொன்னவ..?

அவர் : ஓம்... அதுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்... கடல் கடந்த நாட்டிலை வேலைசெய்கிறாயா...?

இவர் : இல்லை கடல் கடந்து சென்று கள்ளக்கடத்தல் செய்கிறன்...

யமன் : இவர் செய்த பாவங்கள் - குற்றங்களை வாசிபார்க்கலாம்.

சித்திரபுத்திரன் : ஐயா இவர் சுற்றுச் சூழல் மாசடையக் கூடிய வகையில் பல சமூக விரோத தொழில்களைச் செய்தவர்....


யமன் : அப்படியா? இவருக்கு தண்டனையாக பரந்தன் முல்லைத்தீவு வீதியில் பங்குனிமாத புழுதி பறக்கும் வெய்யிலில் மாட்டு வண்டிலில் பத்துத் தடவை போய்வரும் தண்டனையை வழங்குகிறேன்...

இறந்தவர் : வேண்டாம் ஐயா..என்னைப் பேசாமை நரகத்துக்கே அனுப்பிவிடுங்கள் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்.

அவன் : நான் எழுதியனுப்பிய கதை பிரசுரமாகாமல் திரும்பி வந்துவிட்டது.

இவன் : அப்படியா... கதையின் பெயர் என்ன?

## ஊக்கமாத்திரை



**தேவபாலு**

# உன்னாலும் முடியும்...



வானத்தை அன்னார்ந்து பார்த்த கமலம், சூரியனின் வீச்சுக்கு வீராப்பு காட்ட முடியாது தலையைக்கவிழ்த்துக் கொள்கிறாள்.

'இப்ப எப்பிடியும் பத்த ரையாவது இருக்கும். ஒரு பெட்டி மீன்காரன் கூட வரேல்ல். இண்டைக்கு எங்க போய்த் துலைஞ்சாங்களோ தெரியாது. இல்லாட்டி எத்தின மீன்காரர் பீப்.... பீப் எண்டோண்டு போயிருப்பாங்கள். அக்கா நல்ல கரவல மீன், நல்ல நண்டு, நல்ல இறால், நல்ல முத்தையன் கட்டு யப்பான் எத்தின பேர் சொல்லியிருப்பாங்கள். ஆனா இண்டைக்கு கருவாட்டுக் காரனைக் கூட காணேல்ல" என எண்ணியவாறு மீண்டும் படலையைத் திறக்கின்றாள்.

"என்ன கமலமக்கா கையில ஒரு பேப்பர்த்துண்டு. புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பற்றி போட்டிருக்கே"

"இல்லையடி மீனுக்கு கெண்டு றோட்டுக்கு வந்தா ஒருத்தனையும் காணேல்ல"

"எங்கன்ர போராளிகளை சர்வதேச கடலில வைச்சு சும்மா ஏதோ சொல்லி அடிச்சுத் தாட்டவன் தானே. எங்கன்ர கடலிலேயே தொழிலுக்குப் போறவைய சுட்டுப்போட்டு ஆயுதம் கடத்தின புலிகள் எண்டுதானே சொல்லுவாங்கள்"

"ஓமடி ராதா இதால தானாக்கும் தொழிலுக்குப் போறதுக்குப் பயப்பிடுறாங்கள்"

"பிறகென்ன கமலமக்கா, இப்பிடியெண்றதால தானே என்ர புருசனும் இப்பத் தொழிலுக்குப் போகப்பயப்பிடுகிறார்"

அப்போது,

"அம்மா, நான் சந்திக்குப் போட்டு வாறன்"

அவன் கமலத்தின் இரண்டாவது மகன். கிட்டத்தட்ட இருபத்திரண்டு வயது இருக்கும் மிடுக்கான தோற்றம் கண்கவர் அழகு. அளவான உடல் வாகு.

"தம்பி பரன், மீன் இல்லையடா. மினிக்குப் பக்கத்தில பெட்டிக்காரர்கள் நிப்பாங்கள். பாத்து நல்ல மீனா வாங்கி வா"

எனப் பேப்பரையும் பணத்தையும் கொடுக்க, அவன் வாங்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்கின்றான்.

"அக்கா நான் போறன்"

"ஓமடி"

கமலமும் விடை பெற்றுக் கொண்டு வளவுக்குள் நுழைகின்றாள்.

பரன் மினிக்கு அண்மையாக உள்ள அந்த மரத்தின் கீழ் சைக்கிளை நிறுத்திவிட்டு, பேப்பரை கையிலெடுத்த போது மீன் விற்கின்ற ஒருவருடைய பேச்சு அவனை அடுத்த அடி எடுத்து வைக்காதே நடப்பதை அவதானி என்றவாறு நிறுத்தியது. கையில் குடையுடன் குந்தியிருந்தவர் முன்னாலே சுமாராய் நாற்பது கிலோக்கிராம் அளவு சூடைமீன் குவிக்கப் பட்டுக்கிடத்தன. எதிரே மரஊன்று கோலுடன் நின்ற ஒருவருக்கு விழும் கடும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் பரனையும் தாக்காமல் விடவில்லை. ஆத்திரம் தலைக்கேறினாலும் அடக்கிக் கொண்டான்.

"உனக்கெல்லாம் உழைக்கிறதுக்கு என்ன பிரச்சினை. ஒரு காலில்லாட்டியும் உழைக்க முடியும் நீங்களெல்லாம் பிச்சையெடுத்து சாப்பிட என்றே பிறந்தனீங்களா....? உழைச்சுச் சாப்பிட பழகுங்கோடா. உங்களையெல்லாம் இந்த ஊர்சனம் தான் பழுதாக்கிப் போட்டுதுகள். கேட்டோன்ன இரக்கப்பட்டுச் சாப்பாடு சில வேளை மருத்துவம், தங்க இடம். இதாலதாண்டா சும்மா திரியிறியள். அங்கால போ. உன்னைப்பற்றி எனக்குத் தெரியும். நான் ஒரு சூடைமீன்கூட உனக்குத் தரமாட்டன்...."

என்று மகாபாரதக் கதையைச் சொல்லி முடித்தவர் போலத் தெளிவான பார்வையை உலாவ விடுகின்றார்.

வாடியமுகம். அனுதாபத்தைப் பெறுவதற்காக பரனின் முன்பாக நிமிர்கிறது. அவன்

"அண்ண என்ன நடந்தது. ஏன் உங்களைப் போய் இப்பிடி பேசுறார். எனக்கே பொறுக்கேலாமக்கிடக்குது"

"நான் வீடு பார்க்கப் போய்தான் காலக்குடுத்திட்டன். பத்துரூபா இருந்தா தா தம்பி"

"அவற்ர கதைய மனசில வைச்சிருக்காதையுங்கோ." என்றவன் பத்துரூபாத்தாளை அவரது கைகளிற்குள் திணிக்கின்றான்.பரன் அந்த மீன்காரனிடமே நேரடியாகச் செல்கின்றான்.

"வாங்கோ தம்பி. மீன் வேண்டுமா...? நல்ல மீன். என்ன யோசிக்கிறியள். அந்த சோம்பேறி ஏதும் சொல்லியிருப்பான்"

இதுவரை பொறுமையாக இருந்தவன்

"அண்ண மனிதத்தை தொலைச்சுப்போட்டா கதைக்கிறியள்"

"தம்பி ஆத்திரப்படாத. அநுபவம் தான் ஒருத்தனுக்கு நல்ல படிப்பினையைக் கொடுக்கும். நீ இன்னும் உலகமடிபட நிறையக்கிடக்குது. என்னைப் பார் இவனமாதிரி இருந்திருந் தால் எத்தினபேர் ஏறி உளக்கியிருப்பாங்கள். எல்லாம் என்ர முயற்சிதானடா தம்பி" என்றவாறு அவர் அணிந்திருந்த சறத்தை மெதுவாக விலக்குகின்றார். சறத்தால் மூடியிருந்த அந்த இறப்பர் கால் தென்படுகின்றது. அவருக்கும் முழங்காலிற்குக் கீழ் துண்டிக்கப்பட்ட நிலைதான்.

"தம்பி நீ ஒண்டையும் மனசில வைச்சிருக்காத. அந்த சோம்பேறி இதில இருந்து இந்த மீனை வித்துத் தந்தாக்கூட நான் ஏதும் குடுக்க மாட்டனே. அஞ்சோ, பத்தோ இல்லாட்டி மீனாவது குடுப்பன் தானே"

"அண்ண அவசரப்பட்டிட்டன் என்ன மன்னிக்கோணும். தவறா உங்களை விளங்கிட்டன். அவற்ற ஆரோக்கியத்திற்குகல்லே உடைக்கலாம். மீன் தாங்கோ அரக்கிலோ"

வாங்கியவன் நேரத்தைப் பார்த்துவிட்டு, விரைவாக, நிலையாக நின்ற சைக்கிளை எடுக்கின்றான்.

எந்தத் தொட்டியும் அதனுடைய அடிப்பகுதியின் மீதே நிலைகொண்டு நிற்கும். - ஆங்கிலப்பழமொழி

# காணிகளுக்காக போட்டியிடும் ரூபாய்களும், டொலர்களும்

**வெளிவாசல் பாலன்**

**தமிழ்ப்** பகுதிகளில் முன்னெப்போதையும் விட இப்போதுகறியின் விலையும் காணியின் விலையும் அளவு கணக்கில்லாமல் ஏறியிருக்கிறது.

சமாதானம் திறந்து விட்ட வாசல்களினூடாகவே இந்த விலையேற்றம் சடுதியாக வந்திருக்கிறது.

பாதை திறப்பும் ஐசின் வரவும் கொழும்புச்சந்தைக்கு மீனைக்கொண்டுபோகிறது. பிடிபடும் மீன் கொழும்புக்கும் இறால், நண்டு, கணவாய் எல்லாம் கொழும்பினூடாக வெளியிலும் போக உள்ளூரில் பொருட் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. ஒருதடவை சிரித்திரன் சுந்தர் கூறியது தான் ஞாபகத்திற்கு வருகிறது.

**“கடலால் சூழப்பட்ட தீவு, ரின் மீனை இறக்குமதி செய்கிறது’’ என்று.**

இவைபோக, சந்தைக்கு வரும் மீன் மற்றும் கடலுணவுகளை, அவை எந்த விலை விற்றாலும் வாங்குவதற்கு ஒரு சிறுவட்டம் தயாராக இருக்கிறது. அவர்களுக்கு அது பிரச்சினையுமல்ல.

தங்களுடைய பிள்ளைகளின் மூலமாகவோ உறவினர்கள் மற்றும் நண்பர்களாலோ வெளியிலிருந்து அனுப்பப்படும் டொலரை ரூபாயாக்கிக் கொண்டு வருவோருக்கு இதிலென்ன பிரச்சினை இருக்கப் போகிறது? இப்படிக் கூடுதலான விலையில்பொருட்களை வாங்குவதையும் தம்மால் அப்படி வாங்கமுடியும் என்பதையும் ஒரு தகுதியாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

இப்படித்தான் இப்போது காணிகளும் வாங்கப் படுகின்றன. சமாதானம் வந்தவுடன் எல்லோரும் இயல்புத் தன்மைக்கு வருவது வழக்கம். யுத்தத்தின் போலல்லாமல் சமாதானத்தின் போது நிலையானவற்றைப்பற்றியே பலரும் யோசிப்பர். நிலையான வற்றையே செய்யவும் முயற்சிப்பார்கள். அதிலும் நீண்டதொரு யுத்தத்தின் பின்னான சமாதானமொன்றின் போது இது இன்னும் அதிகமாகவிருக்கும்.

எனவே, இப்போது ஏற்பட்டிருக்கும் இந்தச்சமாதானச்சூழ்நிலையிலும் பலரும் அப்படி நிலையானதொரு - நிரந்தரத்துக்காக பாடுபடுவது தவிர்க்க முடியாதது.

ஆனால், இந்த நிரந்தரத்துக்கான போட்டியையும் அதனாலேற்படும் விளைவுகளையும்தான் கவனிக்க வேண்டும்.


ஒரு காணிக்கு ஒருவர் கேட்கும் விலையை விட மற்றவர் கேட்கும் விலை கூடுதலாகி இப்படியே ஆளுக்காளான போட்டியில் அக்காணிக்குரிய பெறுமானத்தைவிட அது கூடுதலான விலைக்குப் போய்விடுகிறது.

பொதுவாக காணிக்கு எப்போதும்' இப்படியொரு போட்டியேற்படுவது வழமைதான். ஆனால் இந்தளவுக்கு அது இருப்பதில்லை. அதாவது காணிகளின் பெறுமானத்தை விட அவற்றுக்கான விலை கூடுதலாக இருப்பதும், அப்படியே அந்த விலைகளுக்கு வாங்கப்படுவதும்.

இப்போது வன்னியிலோ, யாழ்ப்பாணத்திலோ, திருகோணமலையிலோ அல்லது தமிழ்ப்பகுதிகள் எங்கேயுமோ ஒரு காணி வாங்குவதை விட கொழும்பில் அப்படியொன்றை வாங்குவது இலேசு என்பது பலருடைய அபிப்பிராயம். அதோடு அங்கே விலையும குறைவென்கிறார்கள் அவர்கள்.

அப்படியென்றால் என்ன நிகழ்ந்திருக்கிறது?

இப்பொழுதேற்பட்டிருக்கும் இந்தச்சமாதானச் சூழல் பலரை தங்களுடைய சொந்த ஊர்களுக்குத்திரும்ப வைத்திருக்கிறது. சொந்த வீடுகளுக்குப் போகச் செய்திருக்கிறது. அகதி வாழ்விலிருந்து விடுபடத் துண்டியிருக்கிறது. வாடகையே வேண்டாம். வீட்டைப் பாதுகாத்தாலே போதும். வேண்டிய காலத்துக்கு இந்த வீட்டில் இருக்கலாம் என்று கூறி தமது வீடுகளை வாடகையே இல்லாமல் பாதுகாப்புக்கு கொடுத்துவிட்டுப் போனவர்களெல்லாம் திரும்பிவந்து ‘எழும்புகிறாயா இல்லையா’ என்று நிற்கிறார்கள்.





இப்படியொரு மாறு

ஏற்படும், அல்லது காணி அமைந்திருக்கும்இட அமைவைப் பொறுத்திருக்கும். உதாரணமாக முக்கியமான நகர்மையத்திலோ அல்லது கல்விநிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் போன்றவற்றுக்கருகிலோ அல்லது காணியிலிருக்கும் கட்டடங்கள், நிற்கும் மரங்கள் மற்றும் சொத்துக்களைப் பொறுத்தேதான் ஏற்படுவது.

ஆனால் இவையெவையும் இப்போதைய காணிப்பெறுமானத்தில் கவனிக்கப்படுவதில்லை. தேவையாக இருப்பது ஒரு காணி என்பதும் அதை எப்படியாவது வாங்கி விட வேண்டுமென்ற முனைப்பும் தான் முதன்மையாக இருக்கிறது. இதை நிறைவேற்றக் கையில் வேண்டிய காசிருக்கிறது.



தலான நிலையேற்படும்போது பலரும் தங்களை ஸ்திரப்படுத்திக் கொள்ளமுயல்கிறார்கள். இங்கேதான் போட்டியே தொடங்குகிறது. இந்தப் போட்டியில் டொலர்க்காரர்கள் வென்று விடுகிறார்கள். அவர்கள்யாராலும் தோற்கடிக்கப்பட முடியாதவர்களாகியும் விடுகிறார்கள்.

வெளியேயிருந்து வரும் டொலர் இங்கே ரூபாயாக்கப்படும்போது மடிநிறைவாகி விடுகிறது. இது போட்டியை நடத்தக்கூடிய திறனைக் கொடுக்கிறது. இந்தப் போட்டி டொலர்க்காரர்களுக்கிடையில் தான் அநேகமாக நடக்கிறது.

அண்மையில் புதுக்குடியிருப்பில் கால் ஏக்கர் காணியொன்றின் விலை முப்பத்தி ஐந்து லட்சத்துக்குப்போயிருப்பதாக ஒரு தகவலுண்டு. கிளிநொச்சியில் பொதுவாகவே அரை ஏக்கர் காணியொன்றின் விலை ஏறக்குறைய இரண்டு தொடக்கம் ஆறுலட்சம் வரை போகிறது. இவையெல்லாம் வெறுங்காணிகளுக்குரிய விலைதான்.

ஒரு காணியின் பெறுமதி அதன் நிலவிஸ்தீரணத்தால்

இது பொதுவாக எல்லோருக்கும் சாத்தியமானதா? இல்லை. ஒரு சாராரைத்தவிர மற்றெல்லோரும் இதனால் மிகவும் பாதிப்படைகிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும்.

வெளிநாடுகளில் பிள்ளைகளோ உறவினர்களோ இருப்பவர்களின் தொகை எத்தனை வீதமானது? ஈழத் தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலானவர்களுக்கு ஏதோ ஒருவகையில் வெளிநாடுகளில் உள்ளவர்களின் உதவியோ, அங்கிருப்பவர்களுடனான தொடர்போ உண்டென்பது சிலருடைய கருத்து.

ஆனால் உண்மையில் அப்படியல்ல. ஏறக்குறைய பன்னிரண்டு லட்சம் தழிழர்கள் புலம்பெயர்ந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால் இவர்களில் க்ணிசமானோர் குடும்பமாகவே வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டவர்கள். தவிர, ஏனையோரின் ஏனைய உறுப்பினர்கள் இங்கே இருந்தாலும் நாலில் மூன்று பங்குக்கு மேல் வெளித்தொடர்புகள் உதவிகளற்றோர்தான்.

அதிலும் போராட்டத்தோடு நின்றவர்களில் பலருக்கு வெளிநாட்டுத் தொடர்புகள் இல்லாத நிலை ஏற்பட்டது என்பதையும் இங்கே கவனிக்க வேண்டும். அனுப்பியிருக்கக் கூடிய பிள்ளைகள் போராட்டத்தில் இணைந்திருந்தார்கள். உழைக்கவேண்டியவர்கள் போரில் ஈடுபட்டிருந்தார்கள். எனவே இவர்களுக்கு எப்படி வெளித்தொடர்புகள் கிட்ட முடியும்?

**போராட்டத்தோடு நின்றவர்களில் பலருக்கு வெளிநாட்டுத்தொடர்புகள் இல்லாத நிலை ஏற்பட்டது என்பதையும் இங்கேகவனிக்கவேண்டும். அனுப்பியிருக்கக்கூடிய பிள்ளைகள் போராட்டத்தில் இணைந்திருந்தார்கள். உழைக்கவேண்டியவர்கள் போரில் ஈடுபட்டிருந்தார்கள்·எனவே இவர்களுக்கு எப்படி வெளித் தொடர்புகள் கிட்டமுடியும்?**

தவிரவும், இங்கிருப்பவர்களில் கூட, இங்கே வேலை செய்யுமொருவர் சாதாரணமாகப் பெறும் மாதவருமானம் ஐயாயிரம் ரூபாயாகவும், அதற்குக் குறைவாகவும் தானிருக்கிறது. ஆனால் லண்டனில் வேலை செய்யும் ஒருவர் பெறுகின்ற சம்பளம் மாதமொன்றுக்கு ஒரு லட்சத்துக்கும் மேல். இப்படி இருக்கும் போது இரண்டு வருமானத்துக்குமுள்ள வித்தியாசம் கொஞ்சமானதல்ல. இரண்டு குடும்பங்களும் ஒரே சூழலில் இருக்கும் போது இரண்டுக்குமிடையில் உருவாகும் பிரச்சினைகளும் ஈடுகொடுக்க முடியாமைகளும் பலவாகவே இருக்கும். இருக்கின்றன.

இது எங்களின் சமூகத்தை மிக மோசமானதொரு பிரச்சினைக்குக் கொண்டு செல்லத்தான் போகின்றன.காணிவாங்கும் போதும் கறிவாங்கும் போதும் மட்டும் ஏற்படுகின்ற பிரச்சினைகள் மட்டுமல்ல இவை. வாழ்வின் சகல நிலைகளிலும் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற பிரச்சினைகளாகவேயிருக்கின்றன இவையெல்லாம்.

தமிழ்ப்பகுதிக் காணிகளின் விலையேற்றம் தமிழர்களுடன் மட்டும் தொடர்புபட்டிருக்குமென்பதால் இந்த நிலை தொடரத்தான் போகிறது. சமூகக்கரிசனையாளர்களும் பொருளியல் அறிஞர்களும் இவற்றுக்கொரு மாற்றுத் தீர்வைகாண முயலவேண்டும். அப்படி முயலவேண்டியது அவசியமானதும் கூட.

இல்லாது இந்தநிலை தொடருமானால் வெளிநாடுகள் பலவற்றில் சொந்த வீடில்லாது இருப்போர் தொகையைப்போல் இங்கேயும். அப்படியொரு தொகையினர் காலப்போக்கில் பெருகக்கூடிய பெரும் அபாயமுண்டு. ஆனால் அங்கே அந்த நாடுகளில் வீட்டு வசதிக்கான வேறு ஏற்பாடுகளுண்டு.

காணியின் விலையே மலையுச்சியிலிருக்கும் போது வீட்டைப்பற்றிக் கனவுகூடக் காணமுடியாத நிலை பலருக்கேற்பட்டுவிடும்.

நீரூற்றில்லாத காணிகள், மரங்களில்லாத காணிகள், மண்வளம் குறைந்த காணிகளுக்குக் கூட ஒரு ‘மவுசை’ டொலர் கொடுத்திருக்கிறது. மனிதருக்கும் மனச்சாட்சிக்குமல்ல. ▲

# பின்னிணைப்பு -01


# UTHR-J என்பவர்கள் யார்?

04-04-2003 அன்று வெள்ளிநாதத்தில் வெளிவந்த மேற்படி கட்டுரையை படித்த பலர் என்னோடு தொடர்பு கொண்டு சுவாரஸ்யமான சில தகவல்களைத் தந்தார்கள். அவற்றை வாசகர்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

ஆறுமுக நாவலரோடு சமகாலத்தில் வாழ்ந்தவர் திரு.S. சிறிநிவாசன். சுத்தசைவர். ஆறுமுக நாவலரைப் போலவே தமிழ்ப்பண்டிதர். ஆனால் அப்போதய தமிழ் கூறும் நல்லுலகத்தில் ஆறுமுக நாவலரோடு போட்டி போட முடியாமல் ஒரு வித வித்துவக் காய்ச்சலுக்கு உட்பட்டிருந்தார்.

இவரை அப்போது யாழ். மத்திய கல்லூரி முதல்வராக இருந்த வண. பிதா பேசிவல் அவர்கள் பைபிளை தமிழில் மொழி பெயர்க்க அமர்த்தினார். (Jattna Version Bible) பைபிளின் யாழ்மாற்றுரு என்று இவரது மொழிபெயர்ப்பு அப்போது அழைக்கப்பட்டது. 1850 இல் பிரசுரிக்கப்பட்டது. இதனால் கிறிஸ்தவ வட்டாரங்களில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டது. இதை அனுகூலமாக்கிக் கொள்ள முனைந்த திரு. சிறிநிவாசன் கிறிஸ்தவராக மதம் மாறினார்.

இவருக்கு எலிஜா கூள் (ELIJHA HOOLE) என்று பெயர் சூட்டப்பட்டது. நீங்கள் நினைப்பது சரிதான் UTHR -J ஐ வசதியாகப் பயன்படுத்தும் கூள் சகோதரர்களின் தந்தை இவர் தான். மதம் மாறியபின் இவர் நாவலர் மீது தனிப்பட்ட தாக்குதல்களை துண்டுப்பிரசுரங்கள் மூலம் மேற்கொண்டாராம்.




ஏராளமான துண்டுப் பிரசுரங்களை இவர் இந்தவகையில் வெளியிட்டாராம். இந்தத் தகவலை எனக்குக்கூறிய பெரியவர், "தம்பி, அவங்கட மரபணுவிலயே இந்த வருத்தம் இருக்கு. இதுகள் நாய்வால் மாதிரி. திருத்தவேமுடியாது'' என்று குறிப்பிட்டார்.

UTHR - J இன் 30க்கு மேற்பட்ட அறிக்கைகள் மேற்படி கூற்றைமறுக்கமுடியாமல் செய்து விட்டன.

இன்னொரு நண்பர், கூள் குடும்பமே புலனாய்வுச் சேவைகளால் கையாளப்படுவதாக சந்தேகம் நிலவுவதாகக் குறிப்பிட்டார். இந்த குடும்ப உறுப்பினர்கள் கேந்திரஸ்தானங்களில் தங்களை நிலைப்படுத்திக் கொண்டுள்ளார்கள்.

இவர்களில் சாள்ஸ் கூள் என்ற சகோதரர் திருகோணமலையில் வாழ்கிறார்.

ரத்தின ஜீவன் கூள் பேராதனையில் பணியாற்றுகிறார். பேராதனையில் உள்ள வெளிநாட்டில் (அமெரிக்கா) பயிற்றப்பட்ட ஒரே பேராசிரியராக இவர் இருக்கிறார்.

மட்டக்களப்பு பல்கலைக் கழகத்தில் திருமணம் முடித்த இவர்களது சகோதரி இருக்கிறார்.

இன்னுமொரு டாக்டர் (மிஸ்) கூள் திருமணம் முடிக்காமல் யாழ் 1ம் குறுக்குத் தெருவில் வாழ்ந்து வந்தார்.

இந்த கூள் குடும்பத்தினர் முன்னாள் கோப்பாய் பா.உ S. கதிரவேற்பிள்ளையின் நெருங்கிய உறவினர்களாவர்.

கலாநிதி ராஜன் கூள் கொழும்பில் பணியாற்றுகிறார். இவர் முன்பு சற்றடே ரிவியூ ஆங்கில பத்திரிகையில் ஒரு வருடம் வரை வேலைசெய்த வர் இவரும் பேராசிரியர் தயாசோமசேகரம், கலாநிதி சிறிதரன் கலாநிதி மனோரஞ்சன் (அமுது பத்திரிகை ஆசிரியர்) இந்திய அமைதிப்படைக் காலத்தில் மர்ம சாவுக்குட்பட்ட கலாநிதி ரஜினி திரணகம ஆகியோர் இணைந்து 'உடைந்த பனைமரம்' என்ற புலிகளையும் தமிழ்மக்களையும் இழிவுபடுத்தும் நூலை எழுதினார்கள். இந்தநூல் இந்தியர்களின் தூண்டுதலால் எழுதப்பட்டதாக சொல்லப்படுகிறது

இந்நூலின் உண்மையான பெயர் விபரம் கீழே உள்ளது.

The Tamil Crisis in Srilanka - An Inside Account

வெளியீடு : The SriLanka Studies Institute -CLAREMONT - 1988

கலாநிதி ராஜன் கூளும், கலாநிதி K. சிறிதரனும் இணைந்து.

The Peace Question: Understanding The Reality on Both Sides

(வெளியீடு : Tamil Times - 1995)

என்ற நூலை வெளியிட்டுள்ளார்கள்.

ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு "உன் நண்பனை பற்றிச் சொல். உன்னைப்பற்றி நான் சொல்கிறேன்."

நான் என்ன சொல்ல வருகிறேன் என்று உங்களுக்கு புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன். யேசுநாதரின் மலைப்பிரசங்கத்தில் ஒருவரி உண்டு. அதைக்கூறி முடிக்கலாம் என நினைக்கிறேன்."மரங்களின் வேர்களில் கோடரிகள் வைக்கப்பட்டுள்ளன கனிகொடாதவை எல்லாம் வெட்டுண்டு அக்கினியில் தள்ளப்படும்"

மீண்டும் சந்திப்போம்.

**வின்சென்ற் புளோரன்ஸ்**

---

# படித்ததில் பிடித்தது

# நீள் துயில்

நீலாவணனின் பிறிதொரு இயல்பு மானம் பாராட்டி வாழ்ந்தமை. மயிர்நீப்பின் உயிர்வாழாக் கவரிமானை நான் கண்டதில்லை. அந்த இயல்பினை நீலாவணனிடம் நான் கொள்கையாகக்கண்டேன். அவர் எதிலும் ஒரு தீவிரவாதி. அன்பின் தீவிரத்தினாலே ஒரு மனிதனைத் திணறடிக்கும் கலையை நீலாவணனிடமே கற்றுக்கொள்ளலாம். ஒரு கொள்கையிற் பிரிந்தவருடன், தமக்கு எவ்வளவு இழப்பு நேரலாம் என்ற போதிலும், ஒதுங்கி வாழ்வதிலும் அவர் தீவிரமே காட்டினார்.



அவர் காலமாவதற்கு முன்னர், அவர் கடைசியாகக் கலந்துகொண்ட வானொலிக் கவியரங்கு பற்றியவர்த்தமானத்தை, அதன் சாட்சியாய் இருந்தவி.ஏ.சிவஞானம் சொல்லியிருக்கிறார். மேற்படி அரங்கில் பாடுவதற்காக நீலாவணன் சத்தான கவிதை ஒன்றினை எழுதி வந்தார். அதிலே சில பகுதிகளை வெட்டி நீக்கும் படி ஆலோசனை கூறப்பட்டதாம். சொல்லிலும் பொருளிலும் வழுவற்ற அப்பகுதிகளை ஏன் நீக்க வேண்டும் என்று நீலாவணன் வாதிட்டிருக்கிறார். "என் கவிதையின் உயிரை எடுத்த பிறகு, நான் அதனைப் பாட ஒப்பேன்" என்று கண்டிப்பாகக் கூறி, சன்மானத்தையும் நிராகரித்து, புறப்பட்டு விட்டார்! அவருக்கும் எனக்கும் ஒரு மிக அற்ப விஷயத்திலே ஒருவகை Mis understanding இல், வேறுபாடு ஏற்பட்டது. இலக்கியச்சத்தியமோ, தனிப்பட்ட வாழ்க்கையின் தூய்மையோ சம்பந்தப்படாத அற்ப விஷயம்! எனவே, எங்களுக்கிடையில் மீண்டும் இசைவு துளிர்க்கலாம், இருவரும் இணைந்து இலக்கியச் செழிப்பினை நுகரலாம் என்று அன்றுவரை - அந்த அவலத்தந்தி கிடைக்கும் அன்றுவரை நம்பிக் கொண்டிருந்தேன். அந்தோ, என் கவிஞ! நீ என்னை ஏமாற்றிவிட்டாயா? அல்லது என் எதிர்பார்ப்புகள் அனைத்தும் சித்தியாகும் என்கிற என் அகம்பாவந்தான் அழிந்ததா? உன் நீள்துயில்....

அந்த நீள்துயில் பற்றி நீ 1964 இல் பாடிய அந்தக் கவிதை இப்பொழுது என் நெஞ்சைத் துளைக்கின்றது.

அது:

"இந்த உலகில்
இருந்த சில நாழிகையில்
எந்தச் சிறிய உயிரும்
என் ஹிம்சையினால்
நொந்தறியா...
யாருமெனை நொந்ததிலை" என்கிற அந்த
இனிய நினைவாம்
அலங்கிர்தத் தாலாட்டுக் (கு)
என்னிதயம் தந்து
பழம் பிழைந்த
பால் கொஞ்சம் ஊட்டப்
பருகி, அதைத் தொடர்ந்து
கால் நீட்டிப் போர்த்தினேன் என்
கம்பளியால்
தாலாட்டில் மாலாகி
என்னை மறந்து துயில்கையில்...
வீண் ஒப்பாரி வைத்திங் (கு)
உலகத்தைக் கூட்டாதே!
அப்பால் நடப்பை அறிவேன்...
அதை ரசிக்க
இப்பயலை மீண்டும்
எழுப்பி தொலைக்காதே!
தப்பாக எண்ணாதே
தாழ்ப்பாளைப் பூட்டிவிடு!
மேளங்கள் கொட்டி, என்றன்
மேட்டியைக் காட்டாதே!
தாளம் மொழிந்து
நடிக்காதே! என் பயண
நீளவழிக்கு, நில
பாவாடை தூவாதே!
ஆழம் அகலம்....
அளந்தெதுவும் பேசாதே!
மோனத்தில்
உன்னுணர்வை மொண்டு,
இதய நெடும் வானத்தில்
நீ தீட்டி வைத்திருக்கும்
என்னுடைய
தீன உருவை
முழுதும் வழித்தெடுத்து
மீன் விழியில் இட்டு
விளக்கேற்றி
தொட்டிலில் நம்
காவியத்தைப்பாடிக்களி!
பின், இயற்கையொடும்
சாவியலை எள்ளிச் சிரி!

சத்தாகக் கவிதை எழுதிவிட்டாய். உன் கட்டளைப்படி, உன் இழப்பை ஏற்று யாராலே சிரிக்க முடிகிறது?

**எஸ்.பொன்னுத்துரை**

# கவனம்!



# பயண நட்பு

**வேனிலன்**

தலைப்பைப் பார்த்ததும் போக்கு வரத்து நிறுவனமொன்றின் பயணிகளுக்கான அறிவுறுத்தல் என எண்ணி விடாதீர்கள்.

இங்கே சொல்லப் போவது அதையும்விட முக்கியமான விடயம்.

நாம் தூரப்பிரதேசங்களுக்கு தனிமையில் பயணம் செய்கையில், பஸ்ஸிலோ, ரயிலிலோ அருகில் அமர்ந்திருப்பவர் அறிமுகமானவராக இருந்து விட்டால் சந்தோசமடைவோம். அறிமுகமில்லாதுவிடினும், நட்புடன் உரையாடக் கூடியவராக இருந்தால் பயணம் சுவாரஸ்யமாக அமைந்துவிடும். சில சமயங்களில் அருகிலிருப்பவர் 'அலுப்புக்கேஸ'ாய் இருந்து விட்டால் கஷ்டந்தான்.

ரயில் பயணங்களில் ஏற்படும் நட்பு இறங்கியவுடன் முடிந்துவிடும் எனக்கூறப்படுவதுண்டு. சிலசமயங்களில் இவ்வாறான நட்பு தொடர் கதையாகின்றதும் உண்டு. பயண நட்பு காதலாகி திருமணத்தில் முடிவடைந்த கதைகளும் உண்டு.

இப்போதெல்லாம் பயணங்களின் போது அறிமுகமில்லாதவரோடு நட்புக் கொள்வதோ கதைப்பதோ ஆபத்தாக முடிந்து விடலாம். குறிப்பாக தமிழ் பிரதேசங்களிலிருந்து கொழும்பிற்கோ, வேறு சிங்களப் பிரதேசங்களுக்கோ செல்லும் தமிழர்கள் கவனமாக இருக்க வேண்டும். போனோமா அலுவலைப் பார்த்தோமா வந்தோமா என்றிருந்தால் பிரச்சினை இல்லை.

ஏனென்று கேட்கிறீர்களா? கீழே படியுங்கள்.

சில தினங்களுக்கு முன்னர் வன்னி வியாபாரி ஒருவர் பொருள் கொள்வனவிற்காக ஒரு தொகைப்பணத்துடன் கொழும்பிற்கு சென்றார். செல்லும் வழியில் உறவினர் ஒருவரின் வீட்டிற்கும் சென்று வருவதென்பது அவரது திட்டம். கொழும்பிற்கு செல்லும் வழியில்

இடையில் ஒருவர் பஸ்ஸில் ஏறினார். ஏறியவர் வன்னி வியாபாரிக்கு அருகில் இடமிருந்ததால் அதில் அமர்ந்தார். சிறிது நேரத்திலேயே இருவரும் ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டனர். வியாபாரம், நாட்டு நடப்பு என உரையாடல்கள் சுவாரஸ்யமாக தொடர்ந்தன.

தான் நிட்டம்புவ எனுமிடத்தில் இறங்கப் போவதாக வன்னி .வியாபாரி 'நண்ப'ரிடம் கூறினார். அங்கிருந்தே இன்னொரு பஸ்ஸில் ,தன் உறவினர் வீட்டிற்கு செல்ல வேண்டும் எனவும் கூறினார். தானும் அங்கேயே இறங்கவுள்ளதாக 'நண்பரும்' கூறினார்.

பஸ் நிட்டம்புவ வந்து சேர, இருவரும் இறங்கினர். அருகிலிருந்த கடையொன்றில் தேனீர் அருந்தினர். தேனீர் அருந்தியதற்கான பணத்தை முண்டியடித்துக் கொண்டு 'நண்பரே' கொடுத்தார்.பின் அடுத்த பஸ்சிற்காக பஸ் நிலையத்துக்குச் சென்று வன்னி வியாபாரி ஓரிடத்தில் அமர்ந்தார். 'நண்பரும்' அருகில் அமர்ந்தார். அவ்வளவுதான். வியாபாரிக்கு கண்கள் இருண்டன; தலைசுற்றியது, அப்படியே சரிந்து விழுந்தார்

கண் வழித்துப்பார்த்த போது வைத்தியசாலைக் கட்டிலொன்றில் தான் கிடத்தப்பட்டிருப்பதை வியாபாரி உணர்ந்தார். உடனே பணத்தைத் தடவிப்பார்த்தார் காணவில்லை.

வைத்தியசாலை மருத்துவரும், பணியாளரும் அவர் கண்விழித்த பின்னரே என்ன நடந்ததென்பதை விசாரித்தனர். போதைப் பொருள் போன்ற மயக்க மருந்து அவரின் உடலில் கலந்திருப்பதாக கூறினர்.

வைத்தியசாலையில் தான் சேர்க்கப்பட்டு இரண்டு நாட்கள் என்பதையும், இரண்டு நாட்களாக மயக்க நிலையிலேயே இருந்திருக்கிறார் என்பதையும், பஸ்ஸில் வந்த 'நண்ப'ரே தன்னை ஓட்டோ வாகனத்தில் இங்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறார் என்பதையும், வைத்தியசாலை ஊழியர்களிடமிருந்து அறிந்து கொண்டார். தனக்கு நேர்ந்த கதி பற்றியும் அவர் விளங்கிக் கொண்டார்.

அட! திருடனே மனிதாபிமானத்துடன் அவரை வைத்தியசாலையில் சேர்த்திருக்கிறானே என நீங்கள் நினைக்கலாம். அப்படியல்ல;

அவர் மயங்கி விழுந்ததும் பயணிகள் அவரைச் சுற்றிக் கூடிவிட்டனர். குடிபோதையில் மயங்கி விட்டாரோ என அவதானித்தனர். அப்படி இல்லை என அறிந்ததும் அவரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்றிருக்கின்றனர். உடனே திருடன், தானே அவரோடு வந்தவர் எனக்கூறி அவரை ஓட்டோ ஒன்றில் ஏற்றி அவரைத்தன் மடியில் கிடத்தி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருக்கிறான். அந்த சமயத்திலேயே பணத்தையும் 'அபேஸா'க்கியிருக்கிறான்.

வியாபாரியும் விவேகமற்ற ஆளல்ல. முன்னெச்சரிக்கையுள்ளவர். தனது வேட்டிக்குள் ஒரு காட்சட்டையும் அணிந்து, காட்சட்டைக்குள் உட்பக்கமாக தைக்கப்பட்டிருந்த 'பொக்கற்'றுக்குள் மிகப்பாதுகாப்பாகவே பணத்தை வைத்திருக்கிறார்.

ஓட்டோவில் அவரை தன்மடியில் கிடத்திக் கொண்டு செல்கையிலேயே திருடன் பணம் எங்கேயிருக்கிறது எனத் தடவிப் பார்த்து 'நைஸாக' உருவியிருக்கிறான். வியாபாரியை வைத்தியசாலையில் விட்டதும் அவன் பறந்து விட்டான்.

இதே காலகட்டத்தில் நடந்த இன்னொரு சம்பவத்தையும் கேளுங்கள்.

கொழும்பு மலிபன் வீதியிலுள்ள 'லொஜ்' அது. தமிழர் ஒருவரே அதன் உரிமையாளர். தமிழர்களே அதிகமாக அங்கு வந்து தங்குவதுண்டு. அன்று வாடிக்கையாளர் சற்றுக்குறைவு. அன்று மாலை ஒருவர் வந்தார். முன்னரும் இரண்டுதடவைகள் இங்கு வந்து தங்கியவராம் அவரும் தமிழ் பேசும் சமூகத்தைச் சேர்ந்தவர்தான்.

கலகலப்பாகப்பழகும் சுபாவமுள்ளவராம். மாலை முழுவதும் வரவேற்பறையில் அமர்ந்து உரிமையாளருடன் உரையாடிக்கொண்டிருந்தார் பின், இரவு உணவிற்காய் கடைக்குச் சென்றவர் கையில் 'ஐஸ்கிறீம்' பக்கட்டுக்களுடன் திரும்பி வந்தார்.

'லொஜ்' உரிமையாளருக்கு ஒன்று பணிபுரியும் இளைஞருக்கு ஒன்று. அருகில் நின்ற இன்னொருவருக்கு ஒன்று. தான் ஒன்று என ஐஸ்கிறீம் பகிரப்பட்டு உண்ணப்பட்டது. இரவு பத்துமணியளவில் எல்லோரும் நித்திரைக்குச் சென்று விட்டனர்.

அடுத்தநாள் - அதிகாலை, 'லொஜ்' உரிமையாளரும், பணியாளரும் மயங்கிக் கிடந்தனர். உரிமையாளரின் அறை திறக்கப்பட்டு இரும்பு அலுமாரி திறக்கப்பட்டு - பணமும் நகைகளுமாக பத்து இலட்சம் பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டிருந்தன.

'ஐஸ்கிறீம் அசாமி' தனது வேலையை கச்சிதமாக முடித்துக் கொண்டு நள்ளிரவின் பின் கம்பி நீட்டியிருந்தான்.

'லொஜ்' உரிமையாளரும், பணியாளரும் இரண்டு நாட்களின் பின்னரே சுயநினைவிற்கு வந்தனர். கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அவர்களின் சிகிச்சைக்கான செலவுமட்டும் இருபத்தைந்தாயிரம் ரூபா முடிந்தது. இவர்களுக்கும் போதைப் பொருள் போன்றதோர் மயக்க மருந்தே ஐஸ்கிறீமுடன் கலந்து கொடுக்கப்பட்டிருந்தாக மருத்துவர்கள் கூறினர்.

தற்போது இவ்வாறான திருட்டுச் சம்பவங்கள் சிங்களப்பிர தேசங்களில் நடைபெற்று வருவதாக மருத்துவர்களும், பொலிசாரும் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு வாசிகள் இது குறித்து எச்சரிக்கையாக இருப்பதால், தமிழ் பகுதிகளிலிருந்து வருபவர்களையே இந்த 'மயக்கும் திருடர்கள்' குறி வைத்து விடுவதாக தெரிய வருகின்றது.

இதையும் விட - கொழும்பு நகரின் சூதாட்டக்காரர், சட்ட பூர்வமற்ற சுரண்டல் ரிக்கட் விற்போர், களவாடிய பொருட்களை விற்பனை செய்வோர்போன்றோர் தமிழர்களை ஏமாற்றி பணம் பறிக்கும் சம்பவங்களும் அதிகரித்து வருகின்றன.

கவனமாகவும், எச்சரிக்கையாகவும் இருப்பதன் மூலமே எம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN
SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

SHAN Computer Institute

PROFESSIONAL

# SHAN
## Computer & Typewriting Institute

Regd.No:2001/VAN

37,VAIRAVARKOVIL ROAD, VAVUNIYA.

MANNAR ROAD, VAVUNIYA.

தமிழ் மக்களுக்காக

இலங்கையில் சர்வதேச அங்கிகாரம் பெற்ற ஒரு நிறுவனம்

விரிவான பாடத்திட்டம் மூலம் அதிக கணனி அறிவை மாணவர்களிடம் அதிகரிக்கின்றோம்

E-Mail: Shancomputerinstitute@hotmail.com

(சி-7866)

SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN
SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN SHAN

# நேர்நோக்கு

## செய்ய வேண்டியதைச் செய்யாது

விடுதலைப் புலிகளை மீண்டும் சமாதானப் பேச்சு வார்த்தை மேசைக்கு வரும் படி அவர்களைத் தூண்டவேண்டும். என அஸ்கிரிய பீடாதிபதி கூறியிருக்கிறார். அவரைச் சந்திக்கச் சென்ற அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தனவிடமே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். அவர் இவ்வாறு கூறியிருப்பது நல்ல விடயமே எனப்பலரும் எண்ணக்கூடும்

ஏனெனில் கடந்த இருபது வருடகாலமாக தொடர் யுத்தத்தின் பின்னர் இன்று தோன்றியுள்ள சமாதானச் சூழ்நிலை நீடிக்க வேண்டும். சமாதானத்தீர்வு ஒன்று - நிரந்தரமான தீர்வாக ஏற்படவேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பாகஇருக்கின்றது.

எனவே புலிகள் மீண்டும் பேச்சுவார்த்தைகளுக்கு வருமாறு தூண்டும் வகையில் அரசாங்கம் நடந்து கொள்ளவேண்டும் என்ற வகையில் அமைச்சர் ஒருவருக்கு அஸ்கிரிய பீடாதிபதி ஆலோசனை வழங்குவது போல இது தோற்றமளிக்கலாம்.

ஆனால் எந்தவகையில் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டு தூண்டவேண்டும் என அஸ்கிரிய பீடாதிபதி நினைக்கிறார் என்பதை அவரது ஏனைய கூற்றுகள் வெளிப்படுத்துகின்றன.

ஒன்று வடக்குக் கிழக்கிலிருந்து படையினர் வெளியேறக் கூடாது இரண்டு சிறிலங்கா கடற் படையினர் மீது தலையீடு எதுவும் இருக்கக் கூடாது என்பதே அவர் கூறும் விடயங்களாகும்.

புலிகளைப்பொறுத்தவரை வடக்குக்கிழக்கிலிருந்து படையினரை வெளியேறச் சொல்லவோ அல்லது கடற்படையினரின் நடவடிக்கைகளில் தலையிடவோ முயலவில்லை. அவர்கள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப்பட்டமைக்கு அமைவாகவே தமது கோரிக்கைகளை முன்வைக்கின்றனர்.

வடக்குக் கிழக்கில் நிலைகொண்டுள்ள படையினர் விடயத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு பாடசாலைகள், ஆலயங்கள், பொதுக்கட்டடங்கள், குடியிருப்புகள் ஆகியவற்றில் நிலைகொண்டுள்ள படையினர் அங்கிருந்து விலகி மக்கள் தமது இயல்பு வாழ்வுக்குத் திரும்ப உதவவேண்டுமென்றே புலிகளும் மக்களும் கோருகின்றனர்.

உயர்பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களின் வாழ்விடங்களில் நிலைகொண்டிருக்கும் படையினரை மக்கள் தமது அடிப்படைஉரிமையை அனுபவிக்க உதவுமாறே கோருகின்றனர். இதிலிருந்துபடையினர் வெளியேற்றப்படவேண்டும் இதனை அர்த்தப் படுத்துபவர்கள் சமாதானத்தை விரும்பாதவர்களே.

இதேவேளை படைத்தரப்பும் மனிதாபிமானப் பிரச்சினை பற்றியோ, பேச்சுவார்த்தை முன்னேறிச்செல்வதற்கு முன்னோடியாக அமையவேண்டிய புரிந்துணர்வு ஒப்பந்தத்தை சரிவர நிறைவேற ஒத்துழைப்பது பற்றியோ சிந்திப்பவர்களாக இல்லை.

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கூறப் பட்டதற்கு முரணாகடற்தொழிலுக்கு சிறிலங்கா கடற்படையினர் முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றனர். இன்னமும் பல இடங்களில் கடற்தொழிலுக்கு நேரக்கட்டுப்பாடும், அடையாள அட்டை முறையும் கடைப்பிடிக்கப்படுகின்றது. மீனவர்களை மிரட்டுதல், படகுகளை பீரங்கிப் படகுகளால் மோதிச் சேதப்படுத்துதல் மீனவர்களைக் காயப்படுத்துதல் போன்ற அடாவடிகளைக் கடற்படை மேற்கொண்டே வருகிறது.

அதேவேளை பயிற்சியில் ஈடுபட்டிருந்த போராளிகள், சர்வதேச கடற்பரப்பில் பயணித்த போராளிகளைக் கடற்படை தாக்கி அவர்களின் வீரச்சாவிற்கு காரணமாக இருந்திருக்கிறது. பல தடவைகள் மோதல்கள் ஏற்படும் சூழ்நிலையைத் தோற்றுவித்திருக்கிறது.

தரையில் எவ்வாறு கட்டுப்பாட்டுப் பிரதேசங்களைப் புலிகள் கொண்டிருக்கிறார்களோ அதேபோல கடலிலும் கட்டுப் பாட்டுப்பகுதிகள் அவர்களுக்கு உண்டு. அவற்றில் அவர்கள் பயணம் செய்யவும் மற்றும் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடவும் உரிமை உண்டு.

இவற்றைத் தலையீடு என்று கூறிக் கொண்டும் மக்களின் இயல்பு வாழ்வுக்கு தடையாக இருந்து கொண்டும் சமாதான நடவடிக்கைகளைத் தொடருவது கடினமான விடயமாகும்.

பேச்சுவார்த்தைகளில் இணக்கம் காணப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துமாறே புலிகள் கோருகின்றனர். எனவே புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவழைப்பதானால் அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதே சரியான வழியாகும் அவற்றைச் செய்யக்கூடாது எனத்தடுத்துக் கொண்டு புலிகளைப் பேச்சுவார்த்தை மேசைக்கு வரவளைக்கத் தூண்டவேண்டுமெனக் கூறுவதால் எதுவித பயனும் விளைந்துவிடாது.

**வேலவன்**

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –17



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள் –17**

.......................................................................

.......................................................................

.......................................................................

.......................................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் 16



**மா.சிறிதரன்,**
**118 கனகாம்பிகைக் குளம்,**
**கிளிநொச்சி.**

### பரிசுக்குரிய வரிகள்

**மீள்குடியேற்றம் மிகையான பேச்சு**
**பாதுகாப்பு வலயம் குறுக்கறுத்துப் போச்சு**
**ஊர்திரும்பும் எண்ணம் கனவாகிப்போச்சு**
**வாழ்விற்காய் நாளும் வலைபொத்தலாச்சு**

### பாராட்டுக்குரிய வரிகள்

*உன் அப்பன் நேவியின் வெறிப்பசிக்கு இரையோ*
*அதனால் தான் உன்கையில் பிய்ந்த வலையோ*
*நீ எப்போது வலைவிரித்து உணவுதேடிவருவாய் என்று*
*ஏக்கவிழிகளுடன் அன்னையும் தம்பியும் உன் முன்னோ.*

அ.டபோடில்,
தேவிபுரம்,
புதுக்குடியிருப்பு.

*நீ கடலேறிப் போவதற்காய்*
*பிய்ந்த வலை பொத்துகின்றாய்*
*மீண்டு வந்திடுவாயா என்றெண்ணி*
*தாய் விழி நனைக்கின்றாள்.*

நாவண்ணன்,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

*சோகத்தின் கோடுகள் முகத்தில்*
*பட்டினியின் கோலம் வயிற்றில்*
*வறுமையின் கோடு தைப்பதில்*
*உங்களின் வேதனையை யாரிடம் சொல்ல*

செ. விழிமக்கள்,
சந்தையடி,
வட்டக்கச்சி.

*இருக்கும் இடம் தேடி*
*எம்பசிக்கு அன்னம் தான் வந்திடுமோ*
*கரைவலை தொழில் செய்ய*
*கடல்வலய சட்டம்தான் நீங்கிடுமா*

செல்லாநிக்ஷன்,
இல.58 ,சிவபுரம்,
கிராஞ்சி

*நேற்றவன் களமதில் நின்றவன். நெற்றியடி*
*கொடுக்க துணிந்தவன். மண்ணிற்காய் மறைந்து*
*வாழும் ஒரு பிஞ்சுப் புலிமகன்,பொறு -வலை*
*பொத்தி முடித்ததும் வருவான் உன் கொட்டம் அடக்கிட*

V.கவி,
புதிய மதியரசிநகைமாடம்,
முல்லை வீதி, தர்மபுரம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
**அருச்சுனா புகைப்படக் கலையகம்**
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.


## தொழில்சார் பயிற்சி போதனாசிரியர்களுக்கான பணிநிலை வெற்றிடம்

நிக்கோட் (NECORD) அனுசரணையுடன் வூஸ் (WUSC) நிறுவனம் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பின்வரும் தொழில்சார் பயிற்சி நெறிகளை கற்பிக்கக்கூடிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. மேசன்தொழிநுட்பம் (Masonry) - 08 வெற்றிடங்கள்**
**02. தச்சு தொழிநுட்பம் (Carpentry) - 08 வெற்றிடங்கள்**
**03. நீர்க்குழாய் இணைப்பு (Plumbing) - 08 வெற்றிடங்கள்**
**04. வீட்டு மின் இணைப்பு (House Wiring) - 08 வெற்றிடங்கள்**
**05. மின்னொட்டு (Welding) - 08 வெற்றிடங்கள்**

**பணிநிலை 01**

**பிரதான போதனாசிரியர் (Main Instructor)**

**தகைமைகள்:-**

அங்கிகரிக்கப்பட்ட தொழிநுட்பக் கல்லூரியில் குறிப்பிட்ட கற்கை நெறியில் டிப்ளோமா சான்றிதழ் (குறைந்தது 02 வருடங்கள்) அல்லது அதற்கு சமனான துறைசார் தொழிநுட்ப சான்றிதழ்.

கற்பித்தல் முன் அனுபவம்.

**பணிநிலை 02**

**உதவி போதனாசிரியர் (Assistant Instructor)**

**தகைமைகள்:-**

அனுபவம் தொடர்பான தொழில் தகைமை சான்றிதழ்.

குறிப்பிட்ட தொழில் துறையில் ஆகக் குறைந்தது 05 வருடதுறைசார் அனுபவம்

**நியமனம்:**

01. வருடம் ஒப்பந்த அடிப்படையில், சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

முழு விபரங்கள் அடங்கிய சுயவிபரக்கோவை, உறவு அல்லாத இருவரின் சிபாரிசுடன் எதிர்வரும் 10.06.2003 முன்னதாக கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மாவட்ட இணைப்பாளர்**
**பிராந்தியக்காரியலாயம்**
**கனேடிய உலக பல்கலைக்கழக சேவை**
**30,கோவில்வீதி குருமன் காடு**
**வவுனியா.**

(3193)


## எழுத்தாளர்களுக்கு

வெள்ளிநாதத்தில் நூல் விமர்சனப் பகுதியில் நூல்களின் விமர்சனங்கள் வெளிவர விரும்புகின்றவர்கள். எமக்கு இரண்டு நூல்களின் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு தவறாது கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மேலும் வெள்ளிநாதத்துக்கு ஆக்ககர்தாக்களிடமிருந்து ஆக்கங்களையும் எதிர்பார்க்கின்றோம் கவிதை, கட்டுரை, சிறுகதை பயண அனுபவங்கள், களப்பதிவுகள் என உங்கள் உணர்வின் வடிவங்களை எமக்கு நீங்கள் எழுதி அனுப்பிவைக்கலாம்.

அத்தோடு வெள்ளிநாதத்தோடு தொடர்புகொள்கின்றவர்கள் தவறாது **''வெள்ளிநாதம்''** எனக்குறிப்பிடத் தவறாதீர்கள்.

**உங்களுக்கான**
**எமது முகவரி**
**ஆசிரியர்,**
**வெள்ளிநாதம்,**
**ஈழநாதம்,**
**யாழ் சாலை,**
**கிளிநொச்சி.**



அழகிய காளான் என்று நீங்கள் ஏமாந்து விடுவீர்கள். அழகிலே பெரு அபாயமே இருக்கிறது. அகிலத்தையே ஆட்டிப்படைக்கும் அணுகுண்டு வெடித்தால் காளான் வடிவில் புகை தோன்றும். அப்படியானதொரு அணுகுண்டு வெடிப்பில் பின்னான் காட்சியே இதுவாகும்.





சூரிய சக்தியை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம் என்று ஆராய்ச்சிகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கிறது. மத்தியகோட்டிற்கு அண்மையான நாடுகளில் அதிகம் சக்தியைப் பெற்றுகொள்ளக்கூடிய முதலாக சூரியன் விளங்கி வருகிறது. பனாமா நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் லாபகமாக சூரிய அடுப்பொன்றில் சமையலில் ஈடுபவதை முதலாவது படத்திலும் இமயமலையின் சிகரம் ஒன்றில் சூரிய அடுப்பைப்பயன்படுத்தி தனக்குத் தேவையான உணவை ஆக்கிக்கொள்ளும் ஒரு மலையேறும் நிபுணரை இரண்டாவது படத்திலும் காணலாம்.




# பிரான்சில் தாயகபரணி

கடந்த 01–05–2003 பிரான்சில் இடம்பெற்ற தாயகபரணி இசை நிகழச்சியில் தமிழீழத்தில் இருந்து பங்குபற்றிய தமிழீழ இசைக்குழுவினர் இன்னிசைநிகழ்ச்சி நிகழ்த்திக்கொண்டிப்பதை மேலுள்ள படத்தில் காணலாம். இந்நிகழ்வில் தமிழீழத்தின் தலை சிறந்த இசையமைப்பாளராக எஸ்பி.ஈஸ்வரநாதன், முரளி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். பாடகர்களான எஸ்ஜி. சாந்தன், திருமலைச்சந்திரன், சுகுமார், நிரோஜன், பார்வதி சிவபாதம், மணிமொழி, தவமலர், பிரின்சி ஆகியோர் கலந்து கொண்டனர். இருநாள் நிகழ்வாக இடம் பெற்ற இந்நிகழ்வில் கவிஞர் நாவண்ணன் அவர்களுடைய கரும்புலிகள் பாகம் –01 நூல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து உப்பில் உறைந்த உதிரங்கள் திரைக்காவியம் வெளியிடப்பட்டது. தொடர்ந்து கோபிதாஸ் அவர்களின் வயலின் சோலோ இடம் பெற்றது. இந்நிகழலவில் ஐயாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்து சிறப்பித்துக் கொண்டனர்.








இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே மாதம் 09ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.